வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.02.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 74 | பக்கங்கள் : 16




# தேர்தலை மார்ச் 9 நடத்த முடியாது!

## உயர் நீதிமன்றுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது!

கொழும்பு, பெப். 21

பல காரணங்களால் திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வரும் மார்ச் 09ஆம் திகதி நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு நேற்று திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

15

# தமிழ் பொதுமகனை கட்டிவைத்து தாக்கினர் பெரும்பான்மையினர்!

## கொக்குத்தொடுவாயில் கொடூரம்

முல்லைத்தீவு, பெப். 21

தனது கால்நடை களை களவாட முனைந்த பெரும்பான்மையினத்தவர்களை தடுக்க முனைந்த தமிழ் பொதுமகனை அவர்கள் கட்டிவைத்து கொடூரமாக தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், சிவந்தா முறிப்பு பகுதியில் இந்தச் சம்பவம்

15



# பாராளுமன்றத்தை கலைத்து உடன் தேர்தலை நடத்துங்கள்

## ஜீ. எல். பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, பெப். 21

நாட்டின் மொத்த சனத்தொகையில் 90 சத வீதமானோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - அவர் தலைமையிலான அரசாங்கத்தை புறக் கணித்துள்ளனர். மக்க ளாணை இல்லாத அரசாங்கத்துக்கு சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்காது. பொருளாதார நெருக் கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் உடன் தேர்தலை நடத்த வேண் டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பேரா சிரியர் ஜீ. எல்.

15



காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரிய

# கிளிநொச்சி போராட்டம் ஆறு ஆண்டுகள் நிறைவு

கிளிநொச்சி, பெப். 21

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நீதி கோரி கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைந்தன. இதையொட்டியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கந்தசுவாமி கோவில் முன்றலிலிருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரை ஏ-9 வழியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கைகளில் கறுப்பு கொடிகளை ஏந்தி அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# பாராளுமன்றை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி வசம்!

கொழும்பு, பெப். 21

நள்ளிரவு முதல் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி வசமானது. அரசமைப்பின் 70 (1) உட்பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இந்த அதிகாரம் கிட்டியுள்ளது.

எனினும், அரசமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய பாராளுமன்றம் முதன் முறையாக கூடுவதற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டரை ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் பாராளுமன்றத்

15

# ஐ. எம். எவ்வின் நிதியுதவி சீனாவாலேயே தாமதம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 21

சீனாவிடமிருந்து சாதகமான பதில் கிடைப்பது தாமதமாவதால் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை பெற்றுக் கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளன என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் குறித்து சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை

15

# ஜப்பானிய நிறுவனங்களும் வெளியேறுவதற்கு தீர்மானம்!

கொழும்பு, பெப். 21

நாட்டில் இயங்கிவரும் இரு பிரபல ஜப்பானிய நிறுவனங்கள் வெளியேறத் தீர்மானித்துள்ளன. 'மிற்சுபிஷி', 'தாய்சே' ஆகிய நிறுவனங்களே இந்த முடிவை எடுத்துள்ளன என்று அறிய வருகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி இந்த நிறுவனங்களின் வியாபாரம் மற்றும் ஒப்பந தங்களை கடுமையாக பாதித்துள்ளது. இதையடுத்து, ஒப்பந்தங்களை இரத்து

15

# ஐக்கிய மக்கள் சக்தியினரின் போராட்டம் நேற்று கலைப்பு!

## கண்ணீர் புகை, நீர் தாரை பிரயோகம்

கொழும்பு, பெப். 21

தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கொழும்பில் நடத்திய போராட்டம் கண்ணீர் புகை, தண்ணீர் தாரை பிரயோகம் செய்து கலைக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு - டெக்னிகல் சந்தியில்

15



# கடன் நீடிப்பை ஏலவே சீனா வழங்கி விட்டது!

## சீன வெளிவிவகார அமைச்சு

பீஜிங், பெப். 21

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி இலங்கைக்கு கடன் நீடிப்பை வழங்கியுள்ளது என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சு நேற்று திங்கட்கிழமை தெரிவித்தது.

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) சீனாவின் கடன் மறுசீரமைப்பு ஆதரவுக்கான உத்தியோகபூர்வ உத்தரவாதம் இல்லாமல் இலங்கையின் பிணை எடுப்பை அங்கீகரிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையிலேயே சீனா

15



# இப்படியும் நடக்கிறது...!

மார்ச் ஒன்பதாம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கை இன்று யாருக்கும் இருக்கும் என்று தெரியவில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை இருபத்தி இரண்டு தடவைகள் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயன்றதாக அண்மையில் நாற்பத்தி மூன்றாவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார். அது என்ன, இருபத்தி இரண்டு தடவை என்பது அவருக்கு மாத்திரமே வெளிச்சமானது.

ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து திறைசேரி செயலரும் நிதி அமைச்சின் செயலாளரும் நாட்டின் நிதி நிலைமை குறித்து அநேகமாக ஒவ்வொரு நாளுமே விளக்கமளித்துக் கொண்டுதான் இருந்தனர்.

மிகுந்த நிதி நெருக்கடியிலிருக்கும் ஒரு நிறுவனம், தனது அன்றாட தேவைகளுக்காக தினமும் சேருகின்ற பணத்தை வைத்து எது எது அவசியமானது என்று பார்த்துப்பார்த்து செலவிடுவது போலவே திறைசேரியும் அரசின் தினசரி வருமானத்தை வைத்து அன்றாடம் செலவு செய்துகொண்டிருக்கின்றது என்பதை அவர்களின் ஒவ்வொரு அறிவிப்புக்களுமே வெளிப்படுத்தி வந்தன.

அரச நிறுவனங்களிலிருந்து திறைசேரிக்கு அனுப்பப்படும் பணத்தை தினமும் பெற்று அதிலிருந்தே அவர்கள் செலவிட்டு வந்தனர் என்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தது.

தினக்கூலியாக வேலை செய்யும் ஒருவர் தினமும் வேலைக்குப் போய் கிடைக்கும் பணத்தில் அன்றாடம் காய்ச்சுவதற்கான பொருட் களை வாங்கி குடும்பம் நடத்துவது போலத்தான் இலங்கை அரசு தினமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அரச ஊழியர்களுக்கான சம்பளத்தைக் கொடுப்பதற்கே மாதம் இரண்டு தடவையாக பிரித்து அதிகாரிகளுக்கு ஒரு தினத்திலும் சிற்றூழியர்களுக்கு ஒருதினத்திலும் என்று சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

நிலைமை இப்படியிருக்கையில், தேர்தல் ஒன்றை நடத்துவதற்காக ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகின்றபோது, அதனைப் பெறுவது தொடர்பாக எந்த ஆயத்தங்களையும் செய்யாமல், தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அவ்வாறு ஏற்பாடுகளைச் செய்கின்றபோது, திறைசேரி பணம் தராவிட்டாலும் தேர்தலை நடத்தமுடியும் என்ற நம்பிக்கை இருப்பது போலவே தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது குறித்து முன்னரும் இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக அரச பதவிகளிலிருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு வேட்பாளர்கள் ஆகியவர்கள், தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால், அடுத்து தேர்தல் நடைபெறும்வரை என்ன செய்யப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

தேர்தல் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்படலாம் என்றே நம்பப்படுகின்றது.

இதேவேளை, ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் பொறுப்பிலிருந்த அதிகாரிகள்மீது உயர்நீதிமன்றம் பொறுப்புக்கூற வைத்ததுபோல தேர்தலுக்கு ஒத்துழைக்காத அரச அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசியல் கட்சிகள் இப்போது மிரட்டல் விடத் தொடங்கியிருக்கின்றன.

அரச அதிகாரிகள் தமது கடமையைச் செய்யாமல் விடுவது தண்டிக்கப்பட வேண்டியதுதான். அதற்காக 'கல்லாப்பெட்டி'யில் பணம் இல்லாதபோது பணம் கொடுக்கவில்லை என்று அவர்களை பொறுப்புக்கூறச் சொல்வது சரியானதுதானா என்பது தெரியவில்லை.

உள்ளூராட்சி தேர்தல் இப்படி நடக்குமா நடக்காதா என்று ஊசலாடிக்கொண்டிருக்க, ஜனாதிபதி புதிய அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார். அவர் அறிவிப்பு விடுப்பதும் அதனை அப்படியே நம்பிவிடவேண்டும் என்பதல்ல என்று நீங்கள் முணுமுணுப்பதும் நியாயமானதுதான். ஏனெனில், அவர் இதுவரை ஏராளமான அறிவிப்புகளைச் செய்துவிட்ட போதிலும் எதனையுமே செய்து முடித்துக் காட்டியதாக இதுவரை எதுவும் இல்லையே.

இருந்தாலும், அவர் சொல்லியிருப்பது, "பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும்", என்று சொல்லயிருப்பது ஒன்றைப் புலப்படுத்துகின்றது.

பொருளாதாரத்தை மீட்டெடுத்த பின்னர் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகள் மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றிருக்கிறார். அதாவது அதுவரை எந்த தேர்தலும் நடக்காது என்பதுதான் அதன் அர்த்தம் என்பதையே புரிந்துகொள்ள முடிகின்றது.!

**- ஊர்க்குருவி**

# பிக்குகள் மீது பாயாத சட்டம் இந்து மதகுருமீது பாய்வது ஏன்?

## நீதிமன்றத்தில் சட்டத்தரணி தவராசா கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 21

தென்னிலங்கையில் போராட்டங்களில் ஈடுபடும் பௌத்த பிக்குகள்மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை. மாறாக, வடக்கில் அமைதி வழியில் போராட்டும் இந்து மதகுரு வேலன் சுவாமிமீது அனைத்து வழக்குகளும் பதிவு செய்யப்படுகின்றன என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின் பேரில் நடந்த கிழக்குக்கான பேரணியில் பங்கேற்ற வேலன் சுவாமி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பொலிஸார் தாக்கல் செய்த பி அறிக்கையில், உள்ளூராட்சி சட்டவிதிகள் 81, 81 பி இன் கீழ் இவ்வாறான ஊர்வலங்கள், கூட்டங்களை நடத்த முடியாது. இந்த போராட்டத்தால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டது. பொதுப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அரசமைப்பின் 15ஆவது பிரிவின் கீழ் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது என ஒலிபெருக்கியில் அறிவித்தோம். இந்த போராட்டத்தால் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்பட்டு, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா பூர்வாங்க ஆட்சேபணையை முன்வைத்தார்.

பொலிஸார் குறிப்பிட்டதை போல சட்ட ஏற்பாடுகள் இல்லை, உள்ளூராட்சி சட்டவிதிகள் 81, 81 பி இன் கீழ் வரும் சம்பவங்கள் தேர்தலுடன் தொடர்புடையவை. ஆனால், இது தேர்தலுடன் தொடர்புடைய ஒரு பேரணியல்ல. ஆகவே, குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். போராட்டத்தால் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றுபொலிசார் தெரிவித்துள்ளனர். ஆனால், அவ்வாறு பாதிக்கப்பட்டதாக யாராவது முறைப்பாடு செய்துள்ளார்களா? இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து பேரணி புறப்பட்டு மட்டக்களப்புக்கு சென்றது. மட்டக்களப்பிலும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால், எந்த பொலிஸ் நிலையத்தின் சார்பிலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. யாழ்ப்பாண பொலிஸார் மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

சட்டம் தெரியாமல், சட்டத்தை புரிந்து கொள்ளாமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும். இந்த வழக்கில் வேலன் சுவாமி 7ஆவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார். தெற்கில் எத்தனையோ போராட்டங்கள் நடக்கின்றன. அதில் பௌத்த பிக்குகள் கலந்து கொள்கிறார்கள். பொலிஸார் அதை கண்டுகொள்வதில்லை. அண்மையில் பௌத்த பிக்குகளால் 13ஆவது திருத்தம் தீயிட்டு எரிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் சார்பில் வேலன் சுவாமியென்ற ஒரேயோர் இந்து மதகுருதான் மக்களுக்காக குரல் கொடுக்கிறார். அவரை எல்லா வழக்கிலும் பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளனர். அவர் இந்த போராட்டங்களை ஒருங்கிணைக்கவில்லை. கலந்து கொண்டது மட்டும்தான். இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். இதில் 7 பேரை மாத்திரமே தெரிவு செய்துள்ளனர்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று பொலிஸார் கவலைப்படும் முதல் சந்தர்ப்பம் இது. ஆனால், பொலிஸாருக்கு எதிராகத்தான் அடிப்படை மனித உரிமைகள் ஆணை உருவானது. பொலிஸார், அரசாங்கத்துக்கு எதிராகத்தான் மனித உரிமை மீறல் வழக்கு பதிவு செய்யலாம் என்றார்.

போராட்டத்தால் பாதிக்கப்பட்டதாக பொதுமக்கள் யாராவது முறைப்பாடு செய்தனரா? என நீதிவான் ஆனந்தராஜா பொலிஸாரிடம் கேட்டார். பொலிஸார் "இல்லை" என்றனர்.

இதையடுத்து, பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குவதாக நீதிவான் அறிவித்தார்.

பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, என். சிறிகாந்தா ஆகியோர், இந்த வழக்கை தொடர்வதா இல்லையா என்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுமாறு பொலிஸாரை அறுவுறுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

இதையடுத்து, வழக்கை தொடர்வதா இல்லையா என்பது பற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ)

# யுவதியை வன்புணர்ந்தவருக்கு 15 வருடங்கள் கடுங்காவல் சிறை!

கொழும்பு, பெப். 21

தமது காதல் வெற்றியடைந்து திருமணம் இனிதாக நிறைவேற வேண்டுமென வேண்டி வழிபாட்டுக்கு சென்ற யுவதியை வன்புணர்வு செய்த மதகுருவுக்கு 15 வருட கடுங்காவல் தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

10 வருடங்களுக்கு முன்னர் இந்தக் குற்றத்தை பிரதிவாதி செய்ததற்கு நேரில் கண்ட சாட்சியங்கள் இல்லை. எனினும், சந்தேகத்திற்கு இடமின்றி பிரதிவாதி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையால் இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வழிபாட்டிடம் ஒன்றை நடத்தி வந்த சனுன் பதுர் மொஹமட் என்பவருக்கே இவ்வாறு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் யுவதி ஒருவரை அவரின் அனுமதியின்றி வன்புணர்ச்சி செய்தார் என்று சட்டமா அதிபர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட நீண்ட விசாரணையில், பாதிக்கப்பட்ட யுவதி தனது காதலனுடன் குற்றம் சாட்டப்பட்டவர் நடத்தும் வழிபாட்டிடத்துக்கு சென்று தனது திருமணம் வெற்றியடைய இறைவனை வேண்டி பூசை செய்து வந்தார்.

இந்நிலையில், காதலனை வழிபாட்டிடத்துக்கு வெளியே தொலைவான இடமொன்றுக்கு மதகுரு அனுப்பி வைத்தது தெரிய வந்துள்ளது.

பின்னர், வீட்டில் இருந்த தனது மனைவியிடம் பூஜைக்கு முட்டை தேவை என்று கூறி, வீட்டை விட்டு வெளியே அனுப்பிய பின், வழிபாட்டிடத்தின் கதவை மூடி யுவதியை பலாத்காரம் செய்தது தெரிய வந்தது.

இந்த சம்பவத்துக்கு நேரில் கண்ட சாட்சிகள் இல்லை என்றும் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கான சாட்சியங்கள் இல்லை என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவரின் மரபணு மாதிரிகள், இளம் பெண்ணிடம் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளுடன் ஒப்பிடப்பட்டதை அரசுத் தரப்பு நிரூபித்துள்ளது என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக ரூபாய் 10 ஆயிரம் அபராதம் விதித்த நீதிபதி, அபராதத்தை செலுத்தாவிடின் மேலும் 6 மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

ஈழநாடு
Eelanadu
21.02.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## சீனாவின் உண்மையான முகம்?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதில் நாடு தொடர்ந்தும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உத்தரவாதங்களை வெற்றிகொள்வதே இன்னொரு பெரும் நெருக்கடியாக உருவெடுத்திருக்கின்றது. சர்வதேச நாணய நிதியம் உதவிக்கான ஒப்புதலை வழங்கியபோதும் நாணய நிதியத்தின் உதவிகளை பெறுவதிலுள்ள நெருக்கடிகளை கொழும்பால் வெற்றிகொள்ள முடியவில்லை. இதற்கு சீனாவின் கடும்போக்கான நிலைப்பாடே காரணமாகும். சீனா, கடன் மறுசீரமைப்பிற்கு மறுத்துவிட்ட நிலையில் சர்வதேச நாணய நிதியம் சீனாவை பொருட்படுத்தாது இலங்கைக்கு உதவிவழங்கும் முடிவை பரிசீலித்திருக்கின்றது. இந்த பின்புலத்தில்தான் மார்ச் மாதமளவில் நாணய நிதியத்தின் கடனுதவியின் ஒரு பகுதி இலங்கைக்கு கிடைக்குமென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது, சீனா பெருமளவில் இராணுவ தளபாட உதவிகளை வழங்கியிருந்தது. இந்தப் பின்புலத்தில் மகிந்தவின் உற்ற நண்பனானது. இதன் மூலம், இலங்கைக்குள் வலுவாகக் காலூன்றும் திட்டத்தை படிப்படியாக முன்னெடுத்தது. மனித உரிமைகள் சார்ந்த மேற்குலக அழுத்தங்களின்போது கொழும்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை முன்னெடுத்ததன் மூலம் சிங்கள தேசியவாதிகளை தொடர்ந்தும் திருப்திப்படுத்தியது. நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாத கொள்கையை கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, இலங்கை விடயத்தில் அப்பட்டமாக அதற்கு எதிர்மாறாக செயல்பட்டது. நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றால் இலங்கையின் விடயத்தில் நடுநிலையான அணுகுமுறையையே சீனா பின்பற்றியிருக்க வேண்டும். ஆனால், சீனா அவ்வாறு செயல்படவில்லை.

சீனா தொடர்பில் சிங்கள தேசியவாதிகள் அபரிமிதமான கற்பனையில் இருந்தனர். சீனாவே இலங்கையின் உண்மையான நண்பனென்று மகிந்த ராஜபக்ஷ ஒருமுறை கூறியிருந்தார். இலங்கையை சீன சார்பு நிலைக்குள் தள்ளிவிட்டதில் மகிந்த ராஜபக்ஷவின் தவறான கொள்கைகளே முக்கியமான காரணமாகும். மகிந்த ராஜபக்ஷவின் மேற்குலகத்துக்கு எதிரான சண்டித்தனத்தை சீனா மறைமுகமாக ஊக்குவித்ததுடன் - மறுபுறமாக ராஜபக்ஷவின் பலவீனத்தை வலுவற்ற நாடுகளுக்குள் காலூன்றும் சீன - சண்டித்தன ஓநாய் இராஜதந்திரத்திற்கான (China's wolf warrior diplomacy) துருப்புச்சீட்டாக பயன்படுத்திக்கொண்டது.

உண்மையில் இலங்கை அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் வலுவடைவதை சீனா விரும்பவில்லை. அரசியல் ரீதியில் குழப்பமான நிலையிலும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற நிலையிலும் இருப்பதையே உள்ளுக்குள் விரும்பியிருந்தது. ஏனெனில், அப்போதுதான் அதன் இலக்குகளுக்காக முழு நாட்டையும் கட்டுப்படுத்த முடியும். இந்த விடயம் இப்போது தெளிவாகியிருக்கின்றது.

உண்மையில் இலங்கை மக்களின்மீது சீனாவுக்கு அக்கறை இருந்திருந்தால் நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியவுடன் சீனா உடனடியாக விரைந்து உதவியிருக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம் கேட்பதற்கு முன்னதாகவே கடன்களை மறுசீரமைப்பை அறிவித்திருக்க வேண்டும். ஆனால், சீனாவோ கடன் மறுசீரமைப்பை ஒரு துருப்புச் சீட்டாகக் கொண்டு மீண்டும் இலங்கையை அதன் கடன்பொறிக்குள் சிக்கவைக்கும் சூழ்ச்சிகள் தொடர்பிலேயே கவனம் செலுத்தியிருந்தது.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியவுடன் இந்தியா உடனடியாகவே எந்தவொரு நிபந்தனையுமில்லாமல் உதவியது. இதுவரையில் 4.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா வழங்கியிருந்தது. இந்தியாவின் உதவி காலமறிந்த உதவியென்று ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். யார் ஒரு நாட்டின் உண்மையான நண்பர்? காலமறிந்து உதவுபவரா அல்லது நாடு மோசமான நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற போது அதனையும் பயன்படுத்தி மேலும் அந்த நாட்டை காலடிக்கு கொண்டுவர முயற்சிப்பவரா? சீனாவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சில தமிழர்களும் கூறுவதை காணமுடிகின்றது. சிங்களவர்களுக்கே இந்த நிலையென்றால் தமிழர்களின் நிலையென்ன? உண்மையான நண்பரை ஆபத்தின்போது அறியலாம்.

# கண்டி அபிவிருத்தி திட்டம்; அமைச்சரவை அங்கீகாரம்!

*கண்டி, பெப். 21*

வரலாற்று சிறப்புமிக்க கண்டி நகரை முழுமையாக அபிவிருத்தியடைந்த நகரமாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, கட்டுகஸ்தோட்டைக்கு செல்லும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுகஸ்தோட்டை, கண்டி மற்றும் குண்டசாலையை மையமாகக் கொண்ட விசேட அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை, கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழு, மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், நகர திட்டமிடல் துறை அறிஞர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்தக் குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு வீதி உலா வந்த "குடியரசு பெரஹறா" நிறைவடைந்ததை அடுத்து நேற்று திங்கட்கிழமை காலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. (ஐ)

## அறிவியல் நகரில் விபத்து; பஸ்ஸை மோதியது ரயில்

*கிளிநொச்சி, பெப். 21*

புகையிரத கடவையை கடந்த இ. போ. ச. பஸ்மீது ரயில் மோதி விபத்து ஏற்பட்டது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் நேற்று காலை 8.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புகையிரதக் கடவையை கடந்து கொண்டிருந்த பஸ்ஸின் பின்புறமாக ரயில் மோதியது. எனினும், இந்த விபத்தால் பஸ்ஸில் பயணித்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இதேசமயம், ரயில் மோதிய பஸ் அருகில் நின்ற காரையும் மோதி சேதப்படுத்தியது. இதில், யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் பீடாதிபதியின் கார் சேதமடைந்தது என்று தெரிய வருகினறது. (ஐ)

## 'திருநெறிய தெய்வீக இசை ஆராதனை'

*யாழ்ப்பாணம், பெப். 21*

இந்து சமயப் பேரவை நடத்தும் 'திருநெறிய தெய்வீக இசை ஆராதனை' நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பேரவை நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய பேரவையின் தலைவர் சிவஸ்ரீ ஈசான சிவ சக்திகிரீவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலாபூஷணம் சி. சிவஞானராசா சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் அமரர்களான வி. தெட்சணாமூர்த்தி, வித்துவமணி என். ஆர். சின்னராசா, கே. பழனிமலை, வயலின் கலைஞர் உ. இராதகிருஷ்ணன் ஆகியோருக்கு கௌரவ விருதுகள் அளிக்கப்படவுள்ளன.

இதேபோன்று, சிவசேனை தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தன், உதயன் பத்திரிகைக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## கற்கைநெறி குறித்த செயலமர்வு நாளை!

*யாழ்ப்பாணம், பெப். 21*

உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அதிகளவில் பெற ஏதுவான தொழில்துறையான 'பராமரிப்பாளர்' கற்கைநெறியை (என். வி. கியூ. நிலை - 3) கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடத்தவுள்ளது.

என். ஏ. ஐ. ரி. ஏ. நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்படும் இந்த கற்கைநெறி 6 மாதங்களை கொண்டதாகும். ஒரு மாதம் அடிப்படை பயிற்சியும் 5 மாதங்கள் மருத்துவமனை பயிற்சியும் அளிக்கப்படும்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் என். ஏ. ஐ. ரி. ஏ. நிறுவனத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறிக்கு 19 - 35 வயது வரையானவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள். 36 - 40 வயது வரையானவர்களும் விண்ணப்பிக்க முடியும். பரிசீலனையின் பின்னரே இணைத்துக்கொள்ளப்படுவர்.

இந்தக் கற்கைநெறி தொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சிறப்பு சொற்பொழிவு


*யாழ்ப்பாணம், பெப். 21*

தென்மராட்சி - வரணி - மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு 'பெரிய புராணம்' சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

'சமயஜோதி' கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் மார்ச் 6ஆம் திகதி வரை தினமும் இரவு 7 மணிக்கு சொற்பொழிவு நடைபெறும்.

முதல்நாளான வரும் வெள்ளிக்கிழமை சைவப்புலவர் சி. கா. கமலநாதனின் தலைமையுரையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் 'அன்பு வலையில் வீழ்ந்த வேடர்' என்ற பொருளில் ஆற்றுவார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 21 செவ்வாய்க்கிழமை**
சுபகிருது வருடம் - மாசி 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துதிவியை




**மேடம்**
உங்கள் முயற்சியில் முன்னேற்றம் உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். மனதில் இருந்த குழப்பம் விலகி தெளிவடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்**
நீங்கள் நினைத்திருந்த செயல் நிறைவேறும். புதிய முயற்சிகளை தள்ளி வைப்பீர்கள். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உங்களுடைய செயலை மற்றவர்கள் புகழ்வர்.

**மிதுனம்**
வசதி வாய்ப்புகள் அதி கரிக்கும். தொழிலில் ஏற்பட்ட தடை சரியாகும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர். வியாபாரத்தில் உண்டான தடைகளுக்கு காரணம் தெரிய வரும்.

**கடகம்**
மனதில் தேவையற்ற குழப்பம் உண்டாகும். உங்கள் முயற்சி இழுபறியாகும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**
திட்டமிட்டு செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். தடை விலகும். ஆரோக் யத்தில் இருந்த சங்கடம் அகலும். உங்கள் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.

**கன்னி**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள் என்றாலும் உங்கள் ஆரோக்யத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த வருவாய் வரும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும் நாள்.

**துலாம்**
துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். திட்டமிட்டிருந்த செயல்களில் மாற்றம் செய்வீர்கள். உங்கள் முடிவு லாபத்தை உண்டாக்கும்.

**விருட்சிகம்**
தாய்வழி உறவினர் ஒருவரால் சில சங்கடம் தோன்றி மறையும் நாள். வேலை வாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சியில் வெற்றி அடைவீர்கள். பெரியோர் ஆதரவால் எண்ணம் நிறைவேறும்.

**தனுசு**
சகோதரர்கள் உதவியுடன் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உதவிகள் வந்து சேரும் நாள். நேற்றைய பிரச்னை ஒன்றில் இன்று நல்ல முடிவுக்கு வரும். நிதிநிலை உயரும்.

**மகரம்**
குடும்பத்தினர் தேவையை நிறைவேற்றுவீர்கள். நேற்றைய எண்ணம் இன்று நிறைவேறும். எதிர்பார்த்த தகவல் வரும். மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும்.

**கும்பம்**
உங்கள் எண்ணம் நிறைவேறும் நாள். தொழிலை விரிவு செய்வது பற்றி யோசிப்பீர்கள். உங்கள் செயல்களில் ஒரு சில தடை உண்டாகும். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும்.

**மீனம்**
செலவுகள் அதிகரித்தாலும் உற்சாகமாக செயல்படுவீர்கள். உங்கள் நலனில் அக்கறை செலுத்து வீர்கள். எதிர்பாராத செலவுகளால் தடுமாற்றம் ஏற்படும். உங்கள் முயற்சி தள்ளிப்போகும்.

# 100,000 பேர் இறக்கக் காரணமான மதுக் கடைகளை மூட வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

*சென்னை, பெப். 21*

சாலை விபத்துகளில் 6 ஆண்டுகளில் ஒரு இலட்சம் இறப்புகள் ஏற்படக் காரணமான மதுக் கடைகளை மூட வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘‘தமிழ்நாட்டில் 2022ஆம் ஆண்டில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் 17,473 பேர் உயிரிழந்தனர் என்று தமிழ்நாடு அரசின் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. 2017-ஆம் ஆண்டில் தொடங்கி 2022-ஆம் ஆண்டு வரை சாலை விபத்துகளில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

சாலை விபத்துகளுக்கு முதன்மைக் காரணம் மதுக்கடைகள் தான் என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருந்தும் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காதது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

2022ஆம் ஆண்டு சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களில் 68 விழுக்காட்டினர், அதாவது, 12,032 பேர் தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் நிகழ்ந்த விபத்துகளில் இறந்தவர்களாவர். மீதமுள்ளவர்கள் மாவட்ட சாலைகள், ஒன்றிய சாலைகள், கிராம சாலைகள் ஆகியவற்றில் நிகழ்ந்த விபத்துகளில் உயிரிழந்தவர்கள்.

சாலை விபத்துகளில் தமிழ்நாடுதான் முதலிடத்தில் உளது. சாலை விபத்துகளுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் கூட, முதன்மையான காரணம் மதுக் கடைகள் தான் என்பது புள்ளிவிவரங்கள் தெரிவிக்கும் உண்மையாகும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 ஆயிரத்துக்கும் கூடுதலான சாலை விபத்துகள் நடக்கின்றன. அவற்றில் 10 ஆயிரத்துக்கும் கூடுதலான சாலை விபத்துகளுக்கு மதுக்கடைகள்தான் காரணம்.

மதுக்கடைகள் எந்த வகையிலும் மக்கள் நலனுக்கானவை அல்ல. தெருவுக்கு தெரு மதுக்கடைகள் திறக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாட்டில் பாதிக்கப்படாத மக்களே இல்லை எனும் அளவுக்கு அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். மதுக்கடைகள் மூடப்பட வேண்டும்.”, என்றார். (ஐ)

# அ. தி. மு. கவை காப்பாற்ற 2ஆவது தர்மயுத்தம் ஆரம்பம்!

## பன்னீர்செல்வம் தெரிவிப்பு

*சென்னை, பெப். 21*

அ. தி. மு. க. சட்ட விதிகளை காப்பாற்ற இரண்டாவது தர்ம யுத்தத்தை நடத்தி வருகிறார் என்றும் விரைவில் மக்கள் தீர்ப்பு வரும் எனவும் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

“அ. தி. மு. க.வை தொண்டர்களுக்கான இயக்கமாக எம். ஜி. ஆர். உருவாக்கினார். எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஆகிய 2 பெரும் தலைவர்கள் அ. தி. மு. கவை யாராலும் வெல்ல முடியாத சக்தியாக வளர்த்து எடுத்தார்கள். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் நிரந்தர பொதுச் செயலாளர் ஜெயலலிதாதான் என்று தீர்மானம் நிறைவேற்றி மகிழ்ந்தோம்.

அ. தி. மு. கதான் தலைமை பொறுப்பை ஏற்பவர்கள் தொண்டர்கள் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும். இதன்படிதான் ஜெயலலிதா மறைந்த பின்பு தேர்தல் நடத்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டது. இதன்படி வேட்பாளர்கள் படிவத்தில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் தான் கையெழுத்திடுவார்கள்

ஆனால், அந்த சட்ட விதியை சிதைக்கும் அளவுக்கு 23ஆம் திகதி பொதுக் குழு நடைபெற் றது. அதில் சர்வாதிகாரத்தின் உச்ச நிலைக்கு சென்று 23 தீர்மானங்கள் இரத்து செய்து அறிவிப்பு செய்யப்பட்டது. அ. தி. மு. க. தலைமை பொறுப்பில் உள்ளவர்களின் பெயரை உச்சரிக்க விரும்பவில்லை. அந்த தகுதியை அவர் இழந்துவிட்டார். அதிமுக சட்ட விதிகளை காப்பாற்ற இரண்டாவது தர்ம யுத்தம் நடைபெற்று வருகிறது.

மக்கள் தீர்ப்பு தான் மகேசன் தீர்ப்பு. அது கூடிய விரைவில் வரும். அப்போது தெரியும். நாம் தர்மத்தின் பக்கம் சென்று கொண்டு இருக்கிறோம் என்று - என்றார். (ஐ)

# தேசத்தைப் பாதுகாக்கவே காங்கிரஸுக்கு ஆதரவு!

## கமல் ஹாசன் தெரிவிப்பு

*ஈரோடு, பெப். 21*

தேசத்தைப் பாதுகாக்கவே காங்கிரஸிக்கு ஆதரவு தெரிவித்துள்ளேன் என்று மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல் ஹாசன் கூறினார்.

ஈரோட்டில் காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ். இளங்கோவனை ஆதரித்து நேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நான் இன்னொரு சின்னத்துக்கு வாக்கு கேட்டு வந்துள்ளேன். ஆபத்துக் காலத்தில் இதெல்லாம் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. சின்னம், கட்சி, கொடி இதையெல்லாம் தாண்டியதுதான் தேசம். அதைப் பாதுகாப்பதற்காகவே, காங்கிரஸிக்கு ஆதரவு தெரிவித்துள்ளேன்.

ஜனநாயகத்தின் வழியாகவும் சர்வாதிகாரம் நம்மை ஆட்கொள்ள முடியும் என்பதற்கான சான்று, தற்போது இந்தியாவில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவும், அறத்தின் காரணமாகவும் நான் ஈரோடு வந்திருக்கிறேன்.

இதுதவிர, எங்களுக்குள் உறவு இருக்கிறது. அவரும் (ஈவிகேஎஸ்.இளங்கோவன்) பெரியாரின் பேரன்தான். நானும் பெரியாரின் பேரன் தான். நான் பெரியார் பேச்சைக் கேட்டு வளர்ந்த பிள்ளை. அதனால் விட்டுப்போன கடமையைச் செய்ய இங்கு வந்திருக்கிறேன்.

விஸ்வரூபம் என்று ஒரு படம் எடுத்தபோது, என்னை தடுமாற வைத்து, வேடிக்கை பார்த்து சிரித்தார் ஓர் அம்மையார். அப்போது கருணாநிதி, ஸ்டாலின் ஆகியோர் என்னைத் தொடர்பு கொண்டு, உதவுவதாகக் கூறினர். இது என் பிரச்னை, நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன். அப்போது என் சுயநலத்துக்காக நான் கூட்டணி



வைக்கவில்லை. இப்போதும், எந்த இலாபமும் எதிர்பார்க்காமல், நம் நாடு மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன் - என்றார். (ஐ)

# பொருளாதார மறுசீரமைப்பு அவசியம் இல்லையேல் நெருக்கடிநிலை நீடிக்கும்

## சிரேஷ்ட பொருளியலாளர் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 21

**நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள கொள்கைகளை மறுசீரமைக்கவேண்டும் என உலக வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளர் சாந்த தேவராஜன் தெரிவித்தார்.**

அதனைச் செய்யாமல் விட்டால் தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கையால் மீள முடியாது என்றும் 5 வருடங்களின் பின்னர் மீண்டும் கடன் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய உணவைப் பெறுவதற்கு பலர் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் நாட்டில் செல்வந்தர்களுக்குத் தொடர்ந்து நிதியளிக்கப்படுவது வேதனையளிப்பதாக அவர் கூறினார்.

இலங்கை மக்கள் கொண்டிருக்கும் இயலுமையை வலுவிழக்கச் செய்யாமல் அரசாங்கம் உடனடியாக கொள்கைகளை மறுசீரமைக்கவேண் டும் என சாந்த தேவராஜன் தெரிவித்தார். (அ)

# விமான நிலையத்துக்கு பிஸ்டலுடன் சென்ற நபர்!

கொழும்பு, பெப். 21

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பக்ரைனுக்கு செல்வதற்கு கைத்துப்பாக்கியுடன் சென்ற கம்பளையைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்து செய்யப்பட்டார் என விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளையைச் சோந்த குறித்த நபர் நேற்று முன்தினம் பகல் பஹ்ரைனுக்கு செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார். அங்கு அவரின் பையை விமான நிலைய சோதனைச் சாவடியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சோதனை செய்தபோது பையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த கைத்துப்பாக்கி ஒன்றை கண்டுபிடித்தனர்.

இதன்போது பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை யடுத்து குறித்த நபரை கைது செய்ததுடன் கைத்துப்பாக்கியையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திருப்பாடுகளின் நாடகத்துக்கு பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 21

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால இயக்குநர்களில் ஒருவரும், ஊறணி பங்குத்தந்தையுமான அருள்பணி தி.இ.தேவராஜன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும்,புதிதாக இணைந்துக் கொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 01 ஆம் 02 ஆம் திகதிகளிலுமாக நான்கு நாள்களுக்கு 'குருதி கழுவிய குவலயம்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.(அ)

# உள்ளூராட்சி வேட்பாளர் ஒருவரை பொலிஸார் அடித்ததில் 30 தையல்!

## மனைவி முறைப்பாடு

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு சுயேச்சையாக போட்டியிடும் தனக்க துஷாந்த என்ற வேட்பாளர் மீது கிராண்ட்பாஸ் பொலிஸ் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி 13 ஆம் திகதி இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. துஷாந்த தற்போது கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது கணவரை வீதியில் இழுத்துச் சென்று கிராண்ட்பாஸ் குற்றப்பிரிவுக்கு கொண்டு சென்று கிரிக்கெட் ஸ்டம்புகளால் கொடூரமாக தாக்கியதாக பாதிக்கப்பட்டவரின் மனைவி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள் ளார்.

இடது கை எலும்பு பாதிக்கப்பட்டது, 30 தையல்களுடன். அவரது உடலிலும் பல காயங்கள் காணப்பட்டன என அவர் கூறியுள்ளார்.

காயமடைந்த வேட்பாளர் ராஜா மாவத்தையைச் சேர்ந்தவர். இவருக்கு கிராண்ட்பாஸ் பொலிஸூக்கு அருகில் இரண்டு மாடி கட்டடம் உள்ளது. இவர் பெப்ரவரி 13 ஆம் திகதி கிராண்ட்பாஸில் உள்ள கட்டடத்துக்கு சென்றிருந்தார். தனது கட்டடத்தின் நுழைவாயிலை மறித்ததற்காக ஓட்டோச் சாரதி ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது, அந்த வழியாக வந்த குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி, குறுக்கிட்டார். வேட்பாளர் அவருக்கு பதில் சொல்லாமல் கட்டடத்துக்குள் சென்றுவிட்டார்.

இந்த சம்பவத்தின் பின்னர், குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு அந்த இடத்துக்கு வந்து வேட்பாளரை கிராண்ட்பாஸ் பொலிஸூக்கு அழைத்துச் சென்றது. அவரைத் தாக்கிய பின்னர், வீதி விபத்தின் காரணமாகவே காயம் ஏற்பட்டதாகக் கூறி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இது விபத்து அல்ல, பொலிஸாரின் தாக்குதலே என பாதிக்கப்பட்டவரின் மனைவி வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு பொலிஸாரால் தனக்கு அழுத்தம் கொடுக்கப் பட்டதாகவும் வேட்பாளரின் மனைவி கூறினார்.

இந்த சம்பவம் குறித்து நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சந்தேகத்திற்குரிய பொலிஸ் உத்தியோகத்தர் இன்னமும் கிராண்ட்பாஸ் பொலிஸில் பணி புரிவதாகவும், சம்பவம் பதிவாகியிருந்த பாதுகாப்பு கமெராவின் டி.வி. ஆர் கருவியை பொலிஸார் வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# வடக்கிலிருந்து கிழக்குக்கு பேரணி; கலந்துகொண்டவர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், பெப். 21

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்ட 7 பேருக்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி கண்டனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாண பொலிஸார், யாழ்.நீதவான் நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அதன் அடிப்படையில் குறித்த 7 பேருக்கும் நீதிமன்றினால், நேற்று மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டவர்கள் மன்றில் முன்னிலையானார்கள்.



மன்றில் முன்னிலையான வர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்து சமர்ப்பணம் செய்ததுடன்,இந்த வழக்கை மன்று தள்ளுபடி செய்யவேண்டும் எனவும் விண்ணப்பம் செய்தனர்.

அத்துடன் குறித்த வழக்கு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசணையை கோருமாறும் மன்றில் கோரப்பட்டது.

இதனை அடுத்து 7 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மே மாதம் 08 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈஸ்வரபாதம் சரவணபவன், எம். கே. சிவாஜிலிங்கம், முன்னாள் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்டவர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா மற்றும் மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (அ)

# 6 மாதங்களில் கோழி உற்பத்தி வழமை நிலைமைக்கு திரும்பும்!

கொழும்பு, பெப். 21

எதிர்வரும் ஆறு மாதங்களில் இலங்கையில் கோழிப் பண்ணை தொழிற்துறை நிலையான தன்மைக்கு திரும்பும் என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, கால்நடை தீவன தட்டுப்பாடு, தாய் விலங்குகள் இறக்குமதி நிறுத்தம், உரம் தட்டுப்பாட்டால் உள்நாட்டில் சோள உற்பத்தி சரிவு, சோளம் இறக்குமதி இடைநிறுத்தம் ஆகிய காரணங்களால் கோழிப்பண்ணை தொழில் சார்ந்த பொருட்களில் சரிவு ஏற்பட்டது.

எனினும் கடந்த வருட இறுதிக்குள் 36,000 முட்டையிடும் கோழிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டுக்கு தேவையான அளவு அரிசி கையிருப்பு உள்ளது. இதன் காரணமாக பழைய அரிசி மற்றும் நெல் இருப்புக்களை கால்நடை தீவனமாக பயன்படுத்த முடியும் என்பதனால் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாய அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

தனியார் துறை பண்ணைகளில் தற்போது சுமார் 15 லட்சம் கோழிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷ குடும்பம் அரச பணத்தை வரையறையின்றி கொள்ளையிட்டது

## சந்திரிகா குமாரதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

**எவ்வித வரையறையும் இல்லாமல் அரச நிதியை ராஜபக்ஷ குடும்பம் கொள்ளையடித்தமையே நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லக் காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**



பொருளாதார பாதிப்பு என குறிப்பிட்டுக்கொண்டு அரச தலைவர்கள் சர்வதேசத்திடம் யாசகம் பெறுவதாக குற்றம் சாட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய அவலநிலை கண்டு மனவேதனை அடைவதாகவும் கூறினார்.

முழு உலகத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த இலங்கை, இன்று ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் மோசடியினால் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

ராஜபக்ஷ குடும்பம் மக்கள் எாணை என குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை தவறாக வழி நடத்தி ஆட்சியை கைப்பற்றி முழு நாட்டையும் சூறையாடியது என சந்திரிக்கா குமாரதுங்க குற்றம் சாட்டினார்.

மீண்டும் ராஜபக்ஷர்கள் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்தாலும் ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலகவேண்டும் என சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார். (அ)

# 18 வீதமான சிற்றுண்டிச்சாலைகள் மனித நுகர்வுக்கு தகுதியற்ற நிலை!

கொழும்பு, பெப். 21

நாட்டில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளின் 18 வீதமானவை கள் மனித நுகர்வுக்கு தகுதியற்றவை என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் தரவுகளின் படி, இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அத்துடன், சிற்றுண்டிச் சாலைகளில் நிரந்தர பணியாளர்கள் இல்லாததும், பிரச்னையாக மாறியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (அ)

# சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கு வணிக வகுப்பில் பயணிக்க தடை

கொழும்பு, பெப். 21

சிரேஷ்ட அரச அதிகாரிகள், வெளிநாட்டு உத்தியோகபூர்வ பயணங்களின்போது, விமானங்களில் வணிக வகுப்பில் பயணிப்பதைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையை, ஜனாதிபதி செயலகம் விரைவில் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் செயலகங்களில் பணியாற்றுபவர்கள் உட்பட சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கு, இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இதுவரை சலுகைகளை அனுபவித்த, பல அதிகாரிகள், விமானங்களில் சாதாரண வகுப்பில் பயணிக்க வேண்டும் என்று வலியுறுத்தப் படவுள்ளது.

செலவினங்களைக் குறைக்கும், அரசின் கொள்கையின் படி, இந்த சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கஞ்சாவை சட்டபூர்வமாக்க பல அமைப்புக்கள் எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 21

கஞ்சாவை சட்டபூர்வமாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக இலங்கை மருத்துவ சங்கமும், புகையிலை, மதுபானம் மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பான நிபுணர் குழுவும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கஞ்சாவை சட்டபூர்வமாக்குவது குறித்தும், பொருளாதார நன்மைகளுக்காக, பயிர்ச்செய்கை தொடர்பான சட்டங்களை தளர்த்துவது குறித்தும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தமது கடிதத்தில் இந்த அமைப்புக்கள் கோரியுள்ளன.

இலங்கையின் மக்கள் பல முனைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அரசாங்கத்தின் கஞ்சா பயிர்ச்செய்கை நிலைமையை மேலும் மோசமாக்கவே செய்யும் என்று கூறியுள்ள குறித்த அமைப்புக்கள், இலங்கை மேலும் துயரத்திற்குள் செல்ல முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளன. (அ)

# பொருளாதார நெருக்கடியிலும் வாகன விற்பனை அதிகரிப்பு!



கொழும்பு, பெப். 21

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், சந்தையில் வாகனங்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே, இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்த வாகனங்களின் விலை தற்போது ஸ்திர நிலையை அடைந்துள்ளதாக அவர் கூறினார்.

பெரும்பாலானவர்கள் கடந்த காலங்களில் நாட்டைவிட்டு வெளியேறியமையினால் வாகனங்களின் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்தது.

எனினும், தற்போது கேள்வி அதிகரித்துள்ளதால், வாகனங்களின் விலை ஸ்த்திர நிலையை அடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே தெரிவித்தார். (அ)

# படை முகாமில் ரி 56 துப்பாக்கி திருடிய 2 சிப்பாய்கள் சிக்கினர்!

கொழும்பு, பெப். 21

புத்தளத்தில் உள்ள 58 ஆவது படைத் தலைமையகத்திலிருந்து 30 சுற்றுகள் கொண்ட தோட்டாக்களுடன் கூடிய ரி-56 துப்பாக்கியை திருடிய சந்தேகத்தின்பேரில் முகாமில் கடமையாற்றும் இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர் என இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை வைத்திருந்தார் என கூறப்படும் அநுராதபுரத்தைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 துப்பாக்கி, தோட்டாக்கள் இரகசிய பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# பதவிகளை தக்க வைப்பதற்கே வியூகங்கள் வகுக்கிறார் ரணில்

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, பெப். 21

கட்சி மற்றும் பதவிகளை தக்க வைப்பது தொடர்பிலே பல வியூகங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுக்கிறார் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து, ஜனநாயக ஆட்சி முறையை இல்லாது செய்வதிலும், ஜனநாயகம் என்பதற்கு பல விளங்கங்களை சொல்லியும் போராட்டங்களை முன்னெடுத்த இன்றைய நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது ஓர் துர்ப்பாக்கியம்.

அவரை ஒரு லிபரல்வாதி என்றுதான் பலர் வெளி உலகில் சொல்லுவார்கள். அந்த லிபரல் தன்மை கொண்டவர், இன்று ஜனநாயகத்தை மதிக்காத அல்லது ஜனநாயக முறைகளை ஏற்றுக் கொள்ளாதவராக இந்த நாட்டில் காணப்படுகிறார்.

அவருடை காலத்தில் பெரிய அநியாயங்கள் நடைபெறுவதற்கான கட்டியம்தான் இந்த தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு, தேர்தல் நிறுத்தப்படுவதற்கு அல்லது பின்னுக்கு கொண்டு செல்வதற்கு காரணமாக அமைகின்றது.

ஜனநாயகத்தை இல்லாது செய்கின்ற பணிகளில் மிகப் பெரிய அளவில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்த பலரும் அதற்காக உழைக்கிறார்கள்.

அவர்கள் மிக ரகசியமான முறையில் தந்திரோபாயமாக தங்களுடைய அழிவு நிலையில் இருக்கிற ஐக்கிய தேசியக் கட்சியை நிமிர்த்துவதற்கான வழிமுறைகள் பற்றி யோசிப்பதுடன், தங்கள் அங்கத்தவர்கள், கட்சி மற்றும் பதவிகளை தக்க வைப்பது தொடர்பில் பல வியூகங்களை வகுக்கின்றார்.

நாங்கள் அடிப்படை உரிமைக்காகவும், வாழ்வியல் உரிமைக்காகவும் இந்த தேர்தல் பயணத்தை மேற்கொள்பவர்கள். நாங்கள் இதன் மூலம் நாடு பிடிக்கின்ற விடயத்துக்குரியவர்கள் அல்லர். எங்களுக்கு முன்னால் பல போராட்டங்கள் விரிந்துபோய் கிடக்கின்றன. நாங்கள் இந்த மண்ணில் வாழ வேண்டியதற்காக போராட வேண்டியவர்களாக இருக்கிறோம் - என்றார். (அ)

# இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கு பணிப்பு

கொழும்பு, பெப். 21

இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சார சபையும் புதிய முறையின் கீழ் இலாபம் ஈட்டுவதற்கு தேவையான பணிகளை மேற்கொண்டுள்ள நிலையில், உத்தேச மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புப் பணிகளை முன்னரே மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், நடைமுறைகளை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், மறுசீரமைப்பு பணிகளும் தாமதமானது.

மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை சில பகுதிகளாகப் பிரித்து பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தச் செயற்பாட்டின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் வாய்ப்பு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் ஏற்கனவே இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், புதிய நிறுவனங்களுக்கு புதிய செயல்முறை மூலம் எண்ணெய் இறக்குமதி செய்ய வாய்ப்பும் கிடைக்கும். (அ)

# அண்ணாமலை கூறியது விஷமத்தனமான கருத்து

## கண்டிக்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, பெப். 21

**வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும், அது தமிழர் தாயகம் என மறைமுகமாக தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்த கருத்தை பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர வன்மையாக கண்டித்துள்ளார்.**

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை அரசாங்கம் போர்க்கொடி தூக்கக்கூடாது என்பதற்காகவே வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கைகளிலேயே உள்ளது எனும் அண்ணாமலையின் விசமத்தனமான கருத்துக்களை நாம் கண்டிக்கின்றோம்.

அண்ணாமலை கூறுவது போல் 13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வாக அமையாது. ஏனெனில் 13 ஆவது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் உளறுவதை இந்தியத் தரப்பினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் அல்ல. 13ஆவது திருத்தத்தை பாராளுமன்றம் ஊடாக முழுமையாக இல்லாதொழிப்பதற்கான நேரமே கனிந்துள்ளது.

இலங்கையில் 13 இற்கு எதிராக பிக்குகள் கூட வீதியில் இறங்கியுள்ளமை அண்ணாமலைக்குத் தெரியவில்லையா?. இது பௌத்த நாடு என்பதை அவர் மறந்துவிட்டாரா - என்றார். (அ)

# கர்ப்பிணிப் பெண் வயிற்றில் உதைத்த கடற்படை சிப்பாய்!

கொழும்பு, பெப். 21

கம்பஹா, கனேமுல்ல - அமுனுகொட வீடொன்றில் நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் உதைத்தார் எனக் கூறப்படும் கடற்படைச் சிப்பாய் ஒருவரை கனேமுல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான நான்கு மாத கர்ப்பிணிப் பெண், கொழும்பு டி சொய்சா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், இந்த தாக்குதலால் அவரது கரு அழிந்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கடற்படைச் சிப்பாயின் சகோதரி ஒருவரின் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது. அதில் இந்த கடற்படைச் சிப்பாயும் கலந்து கொண்டார்.

இந்த கடற்படைச் சிப்பாய்க்கும் உறவினர் ஒருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபரான சிப்பாய் குறித்த நபரை தாக்கியதுடன், நான்கு மாதக் கர்ப்பிணியான அவரது மனைவியின் வயிற்றிலும் பலமுறை உதைத்தார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கடற்படைச் சிப்பாய் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர் புல்மோட்டை பிரதேசத்தில் உள்ள முகாமொன்றில் கடமையாற்றி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

கம்பஹா வலயத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட அறிவுறுத்தலின் பேரில் கனேமுல்ல பொலிஸ் நிலையப் பிரதான பரிசோதகர் தலைமையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# பொலிஸாரிடம் சிக்கிய இளைஞனின் கைபேசிக்கு போதைப்பொருள் கேட்டு வந்த 50 அழைப்புக்கள்!

கொழும்பு, பெப். 21

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிக்கு, ஐஸ் போதைப்பொருள் தருமாறு கேட்டு சுமார் 50 பேர் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக சிலாபம், உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் இந்த அழைப்புகள் வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தெரியாமல் போதைப்பொருள் கேட்டு அழைப்புகளை விடுத்ததாகவும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் அழைப்புக்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து ஐஸ் போதைப்பொருளை கேட்டதாக கூறப்படும் நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

முன்னதாக, 19 வயதுடைய இளைஞன் ஒருவரைக் கைது செய்து அவரிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் இந்த 23 வயதுடைய இளைஞரும் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# உயர்தரப் பெறுபேறுகள் ஜூன் மாதம் வெளிவரும்?

கொழும்பு, பெப். 21

2022 ஆம் கல்வியாண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான பெறுபேறுகளை எதிர்வரும் ஜூன் மாதமளவில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனை தெரிவித்தார்.

2022 ஆம் கல்வியாண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு கணிசமான ஆசிரியர்கள் விண்ணப்பிக்காமை பிரச்னையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த செலவினங்களுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 500 ரூபாய் போதுமானதாக அமையாமைமையினாலேயே ஆசிரியர்களின் விண்ணப்பம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நாளாந்த கொடுப்பனவை 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கல்வி அமைச்சர் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டார்.

எனினும் நாளாந்த கொடுப்பனவு தொடர்பிலான அதிகரிப்பை கல்வி அமைச்சர் சுற்றறிக்கையாக அறிவிக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (அ)

# சரண குணவர்த்தனவுக்கு பிணை!



கொழும்பு, பெப். 21

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, சரண குணவர்தனவை 30,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணையை மார்ச் 23ஆம் திகதி எடுத்துக் கொள்ளவும் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

தேசிய லொத்தர் சபையின் தலைவராக கடமையாற்றிய போது தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான மூன்று வாகனங்களை அவர் முறைகேடாக பயன்படுத்தியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ)

# அண்ணாமலையின் கருத்தை வன்மையாக கண்டிக்கிறோம்

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 21

அண்ணாமலை ஈழத்துக்கு விஜயம் செய்த பின்னர் நாடு திரும்பி, ஈழத் தமிழர்களுடைய பிரச்னைக்கு 13ஆவது சீர்திருத்தம் தான் தீர்வு என்றும், இங்ள்ள மக்கள் அதைத்தான் வலியுறுத்தியுள்ளார்கள் எனவும் கருத்துருவாக்கத்தை செய்யும் கோணத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவரது இந்த கருத்தை நாங்கள் நிராகரிப்பது மட்டுமல்லாது அதனை வன்மையாக கண்டிக்கிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் கடந்த 1987 ஆம் ஆண்டு, இந்த 13ஆவது சீர்திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாகக் கூறி அதனை நிராகரித்து வந்துள்ளார்கள். 13ஆவது சீர்திருத்தம் தான் தீர்வு எனக்கூறி இந்திய நாட்டின் பொம்மைகள், எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயற்பட்டுக் கொண்டு இருந்தும்கூட அவர்கள் இங்கு தேர்தல் கேட்டு வாக்குப் பெற முடியாத சூழ்நிலை தான் உள்ளது.

13ஆவது சீர்திருத்தத்தை நியாயப்படுத்துவதற்காக அது தீர்வல்ல, இருக்கிறதைத்தான் கேட்கிறோம், எமக்கு தேவையானது சமஷ்டி, சுயநிர்ணயம் போன்ற விடயங்களை கூறித்தான் தமிழ் மக்கள் மத்தியில் அதனை திணிக்கப் பார்க்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கு வந்து தமது முகவர்களைத்தான் சந்தித்தார்களே தவிர பொதுமக்களை சந்திக்கவில்லை. தாங்களே 13 ஐ அமுல்படுத்துமாறு கூறிவிட்டு வந்து, இங்கு இருக்கின்ற முகவர்கள் அதனை கதைக்கும் போது ஏதோ ஈழத்தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாகக் கூறுவது பொருத்தமற்ற கருத்து.

நாங்கள் பாதிக்கப்பட்ட, இன அழிப்புகுள்ளான ஒரு இனம். போருக்கு பின்னர் தொடர்ச்சியாக இன அழிப்புக்கு உட்பட்டுள்ள ஒரு இனம். இவை அனைத்துக்கும் காரணம் இந்த ஒற்றையாட்சிக்குள் உள்ள கட்டமைப்புகள். 13ஆவது சீர்திருத்தம் ஒரு துளியளவு கூட தமிழ் மக்களை பாதுகாக்கவில்லை இந்நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள போவதில்லை - என்றார். (அ)

# ரஷ்ய போர்க்கைதிகளை உக்ரைன் இராணுவம் எப்படி நடத்துகிறது?

- ஜேம்ஸ் வாட்டர்ஹவுஸ்

ரஷ்ய ஏவுகணைகள் வானைக் கிழித்துக் கொண்டு உக்ரெய்ன் மீது மீண்டும் பாய்ந்த போது மேற்கு உக்ரெனில் உள்ள போர்க்கைதிகள் வைக்கப்பட்டிருந்த கட்டடத்தில் நுழைந்தோம்.

உக்ரெனில் போர்க்கைதிகள் அடைக்கப்பட்டிருந்த **50** இடங்களில் இதுவும் ஒன்று. போரில் பிடிபட்ட நூற்றுக்கணக்கான ரஷ்ய வீரர்கள், கட்டாயத்தால் போரில் பங்கேற்றவர்கள், கூலிப்படையினர் ஆகியோர் இந்த மோசமான கட்டிடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ரஷ்ய தாக்குதலில் இருந்து தப்பிக்க படைவீரர்கள் தஞ்சமடைந்திருந்த அடித்தளத்திற்குள் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது, உக்ரெனிய வான் பாதுகாப்பு தளவாடங்களின் சத்தம் தொலைவில் கேட்டது.



போர்க்கைதிகள் பரிமாற்றம் என்பது வாடிக்கையாக நடக்கும் ஒன்றாகிவிட்டது. உக்ரெனைப் பொருத்தவரை, அவர்கள் போரைத் தொடர இது மிகவும் இன்றியமையாத ஒன்று. போர்க்கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் இந்த மாதம் மட்டும் **1,762** ஆண்களும், பெண்களும் திரும்பக் கிடைத்திருப்பதாக உக்ரெய்ன் கூறியுள்ளது. இது மிகவும் சிக்கலான வேலை, சில வேளைகளில் இதனை ஏற்பாடு செய்ய மாதக்கணக்கில் நேரத்தை செலவிட வேண்டியிருக்கும்.

ஜெனிவா ஒப்பந்தப்படி, போர்க்கைதிகள் அணிவகுப்போ, பொதுமக்களுக்கு அவர்களை காட்டவோ கூடாது. நாங்கள் விரும்பிய நபரை அணுகி அவர்களின் ஒப்புதலைப் பெற நாங்கள் அனுமதிக்கப்பட்டோம். ஆனால், நாங்கள் செல்லுமிடமெல்லாம் காவலர்களும் உடன் வந்ததால் அங்கிருந்த போர்க்கைதிகளால் சுதந்திரமாக பேச முடியவில்லை. பலரும் அடையாளத்தை மறைக்க தங்களது முகத்தை மூடிக் கொண்டனர்.

ரஷ்யா - உக்ரெய்ன் ஆகிய இரு தரப்புமே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதாக ஐ.நா. மனித உரிமை அமைப்பு கடந்த நவம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. போர்க் கைதிகளுடனான உரையாடலின் போது தாங்கள் மோசமாக நடத்தப்பட்டதையும், சித்ரவதை செய்யப்பட்டதையும் வெளிப்படுத்தியதன் அடிப்படையில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இங்கே, போர்க்கைதிகளை நாங்கள் நன்றாக நடத்துகிறோம் என்று காட்ட காவலர்கள் விரும்பியது போல் தோன்றியது. போர்க்கைதிகளுள் ஒருவர், தாம் கூலிப்படை ஒன்றில் பணிபுரிந்தாக கூறினார். உக்ரெனிடம் இருந்து ரஷ்யா கடந்த மாதம் கைப்பற்றிய சோலேடார் நகரில் பிடிபட்ட அவர், **3** நாட்களுக்கு முன்பு தான் இங்கே கைதியாக கொண்டு வரப்பட்டுள்ளார்.

விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் எதிர்ப்பு காட்டும் வகையில் எங்களை உற்று நோக்கினர். லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் கடந்த டிசம்பர் **29**-ம் தேதி பிடிபட்டதாக ஒரு போர்க்கைதி கூறினார்.

'போர்க்கைதிகள் பரிமாற்றத்தில் நானும் இடம்பெறுவேன் என்று நம்புகிறேன். ஆனால், மீண்டும் ராணுவத்தில் சேர மாட்டேன்" என்றார் அவர்.

'உனக்கு வேறு வாய்ப்பே தரப்படாவிட்டால் என்ன செய்வாய்?" என்று நான் கேட்டேன்.

ஒரு விநாடி தாமதித்த அவர், 'என்னிடம் சில யோசனைகள் உள்ளன. நானாகவே சரணடைந்து மீண்டும் இங்கே வருவேன்" என்று அவர் பதிலளித்தார்.

கட்டடத்தை விட்டு வெளியே வரும் போது, அங்கிருந்த போர்க்கைதிகளுள் பாதி பேர் காயமடைந்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. சிலரது கைகள் அல்லது காலில் பேண்டேஜ்கள் இருந்ததை காண முடிந்தது. மற்றவர்கள் தளர்ச்சியடைந்திருந்தனர் என்பதும் தெரிந்தது.

கையெறி குண்டுவீச்சில் எவ்வாறு காலை இழந்தேன் என்று விவரிக்கும் போது ஒரு இளைஞர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டார். ஒரு கம்ப்ரஷன் இயந்திரத்தின் சத்தத்தை நெருங்கிய போது, ஒரு சிறிய உற்பத்தி கேந்திரம் பார்வையில் பட்டது. அங்கே, போர்க்கைதிகள் மரச்சாமான்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தனர். எங்களைப் பார்த்ததும் மீண்டும் தலை கவிழ்ந்தபடி வேலையைத் தொடர்ந்தனர்.

உள்ளூர் நிறுவனம் ஒன்று இதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாக எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் சிகரெட், இனிப்புகளுக்கு செலவழிப்பதற்காக சிறிது பணத்தை போர்க்கைதிகள் ஈட்ட முடியும்.



பெரும்பாலான போர்க்கைதிகள் இத்தகைய வேலைகளை செய்ய நிர்பந்திக்கப்பட்டிருந்தனர். ரஷ்யப் படை அதிகாரிகள் மட்டுமே தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

மதிய உணவு இடைவேளையின் போது, கட்டடத்தின் மேல் தளத்தில் இருந்த தற்காலிக உணவகத்திற்கு போர்க்கைதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்த சன்னல் வழியே, வெளியில் நடுங்கச் செய்யும் குளிர் காற்றில் உக்ரெய்ன் தேசியக் கொடி பறந்ததை பார்க்க முடிந்தது.

அவர்கள் அமைதியாக, துரிதமாக சாப்பிட்டனர். அவர்கள் சாப்பிடும் சத்தத்தை கேட்க முடிந்தது. பின்னர், ஒவ்வொரு மேசையாக போர்க்கைதிகள் ஒன்றாக நின்று, 'மதிய உணவுக்கு நன்றி" என்று உக்ரெனிய மொழியில் உரக்கக் கூறினர்.

போர்க்கைதிகள் உக்ரெனிய மொழியிலான தொலைக்காட்சிகளை பார்க்க அனுமதிக்கப்பட்டனர். உக்ரெய்ன் மற்றும் ரஷ்யப் படையெடுப்பால் தரைமட்டமாகிப் போன மரியுபோல் நகரத்தின் வரலாற்றைக் கூறும் ஆவணப் படங்கள் காட்டப்பட்டன.

மரியுபோல் நகரை காத்து நின்ற சில உக்ரெனிய படை வீரர்களும் கடந்த போர்க்கைதிகள் பரிமாற்றத்தில் இடம் பெற்றிருந்தனர்.

அங்கிருந்த ஒருவரிடம் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா என்று கேட்டோம். 'ஓரளவு. இது கற்றுக் கொடுப்பதாக இருக்கிறது" என்று அவர் கூறினார்.

அங்கிருந்த சில ரஷ்ய போர்க்கைதிகளால் அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கவும், சிலர் அதனைப் பார்க்காமல் இருக்க விரும்பவும் வாய்ப்புள்ளது.

போர்க்கைதிகள் **2** வாரங்களுக்கு ஒரு முறை போனில் பேச அனுமதிக்கப்படுவதாக காவலர்கள் கூறினார்கள். அவர்கள் போர்க்கைதிகளாக பிடிபட்டிருப்பதை ரஷ்யாவில் இருக்கும் அவர்களது குடும்பத்தினர் தெரிந்து கொள்வதற்கான முதல் வாய்ப்பாக இந்த மொபைல் அழைப்பு பல முறை இருந்திருக்கிறது.

'நீ எங்கே இருக்கிறாய்? ஊரில் உள்ள பாதி பேரிடம் உன்னைப் பற்றி நான் விசாரித்துவிட்டேன்" என்று ஒரு இளைஞரிடம் போனில் பேசிய அவரது தாய் கூறியதை கேட்க முடிந்தது.

'அம்மா, பொறுங்கள். நான் பிடிபட்டிருக்கிறேன். என்னால் கூடுதலாக எதுவும் கூற முடியாது," என்று அந்த இளைஞர் கூறினார்.

'அந்த உக்ரெனியர்களிடமா?," என்று கூறி விட்டு அந்த தாய் உடைந்து அழுவது கேட்டது.

காவலர் அருகில் வந்ததும், 'அவ்வளவு தான் அம்மா. நான் முடிக்கிறேன்" என்று தாயிடம் அந்த இளைஞர் கூறினார். 'நான் ஆரோக்கியத்தோடு உயிருடன் இருக்கிறேன் என்பதே முக்கியம்" என்று கடைசியாக அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

சில போர்க்கைதிகளின் தொலைபேசி அழைப்புகள் எதிர் முனையில் ஏற்கப்படவே இல்லை. அடுத்த அழைப்பில் பேசலாம், எதிர்கால போர்க்கைதிகள் பரிமாற்றத்தில் நாமும் இடம் பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் காத்திருக்கின்றனர்.

(பிபிசி)



# சுதந்திர தினத்தையொட்டி தமிழர்கள் நடத்திய போராட்டங்கள்



நிலாந்தன்

“சிவாஜிலிங்கம் தனது ஆதங்க ஆவேசத்தை வெளிப்படுத்துகிறார். இது அவரது உரிமை. அவரது ஆவேச கோரிக்கைகள் தமிழ் மக்களின் ஆவேச கோரிக்கைகள்தான். எனக்கு அதில் மாற்று கருத்து தெரியலை. ஆனால் இவர் இப்படி தன்னந்தனி மனிதராக இதை செய்யும்போது, அவர் முன்வைக்கும் கோஷங்களும் பலவீனமடைகின்றனவே? தவிர்க்க முடியாமல் ஒரு கோமாளி தோற்றப்பாடும் ஏற்படுகிறதே? இவற்றை இன்னமும் கட்சி, இயக்கரீதியாக பலமாக திட்டமிட்டு அமைப்புரீதியாக செய்ய முடியாதா?”

இவ்வாறு கேட்டிருப்பவர் மனோகணேசன். சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வருகை தந்த ஜனாதிபதிக்கு எதிராக சிவாஜிலிங்கமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்புக் காட்டியிருந்தார்கள். இதில் சிவாஜி லிங்கம் தனி ஒரு ஆளாக நின்று கோஷம் எழுப்பும் காணொளியை பார்த்துவிட்டு மனோகணேசன் மேற்கண்டவாறு கேட்டார்.

இயல்பிலேயே சிவாஜிலிங்கம் ஒரு தனிமனித ராணுவந்தான். நினைவேந்தலிலும் அவர் அப்படித்தான், எதிர்ப்புப் போராட்டங்களிலும் அப்படித்தான். பெரும்பாலான அவருடைய துணிச்சலான அரசியல் செயற்பாடுகளில் அவர் தனியாகத்தான் முன்செல்கிறார். அதை ஒரு குழுச் செயல்பாடாகவோ, அல்லது கட்சிச் செயற்பாடாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட ஒரு செயற்பாடாகவோ ஒழுங்குபடுத்தவேண்டும் என்று அவர் யோசிப்பதில்லை. சில சமயம் அவ்வாறு மற்றவர்களைக் கூட்டுச்சேர்ப்பது கடினமானது என்று அவர் கருதுகிறாரா?

ஒரு மக்கள் கூட்டம் எதிர்ப்பைக் காட்டும்போது அதை ஏதோ ஒரு விதத்தில் உலகத்தையும் ஊடகங்களையும் கவரும் விதத்தில் படைப்புத்திறனோடும், புத்திசாலித்தனமாகவும் ஒழுங்கமைக்க வேண்டும். ஆனால், தமிழ் அரசியல்பரப்பில் அவ்வாறு எதிர்ப்புப் போராட்டங்களில் படைப்புத்திறனோடு கூடிய கூட்டுச் செயற்பாடுகளை அனேகமாகக் காணமுடிவதில்லை. அவ்வாறு மக்கள் மயப்படாத போராட்டங்கள் உரிய செய்தியை, உரிய தாக்கத்தோடு, உரிய தரப்புகளுக்கு உணர்த்தத் தவறுகின்றன.

யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்தைகளில் வெள்ளை உடுப்போடு ஒரு கையில் பைபிளும் ஒரு கையில் ஸ்பீக்கருமாக மதபோதனையை முன்னெடுக்கும் ஒருவரை அடிக்கடி காணலாம். மற்றவர்கள் தன்னைப் பார்க்கிறார்களா? கேட்கிறார்களா? என்பதைக் குறித்து அவர் அலட்டிக் கொள்வதில்லை. அதையோர் இறை ஊழியமாக அவர் தொடர்ந்து செய்துவருகிறார். அது அவருடைய நம்பிக்கை. ஆனால், அதைப்போல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் செயற்பட முடியாது.

சுதந்திர தினத்திலன்று பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி ஊர்வலமாக போனார்கள். அது வடக்குக் கிழக்கு இணைந்த தாயக ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தும் ஒரு பேரணி. அதில் உதிரிகளாக கட்சி பிரமுகர்கள் காணப்பட்டார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்களோடு கலந்துகொண்டார்கள். முன்பு நடந்த பிரூபி போராட்டத்தைப் போல பெருந்திரளான எண்ணிக்கையில் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் பங்குபற்றவில்லை. அதாவது அந்த எதிர்ப்பு பேரணியில் கட்சிகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாக காணப்பட்டது. ஏன் அதிகம் போவான், அதில் பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையே நூற்றுக்கும் குறைவு. கலைப்பீடத்தைத் தவிர ஏனைய பீட மாணவர்கள் பெரும்பாலும் பங்குபற்றவில்லை.

மாணவர்களின் போராட்டம் தொடங்கமுன்பே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் மாணவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றின. மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை தொடங்கிய பொழுது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அதே நாளில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அப்போராட்டமானது அரசாங்கத்துக்கு எதிரானது மட்டுமல்ல, குறிப்பாக குத்துவிளக்கு சின்னத்தின் கீழ் காணப்படும் டெலோ இயக்கத்துக்கும் எதிரானது.

இவ்வாறாக சுதந்திர தினத்தையொட்டி நடந்த போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்மக்கள் கூட்டாகவும் செயல்பட மாட்டார்களா? படைப்புத்திறனோடு போராடவும் மாட்டார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. மட்டக்களப்பில், சுமந்திரனும் சாணக்கியனும் அவர்களுடைய ஆதரவாளர்களும் காந்தி குல்லாயோடு காட்சியளித்தமை ஒரு படைப்புத்திறனாகப் பார்க்கப்படவில்லை. மாறாக அது ஒரு பகிடியாகப் பார்க்கப்பட்டது.

இவ்வாறாக கடந்த சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் நடந்த போராட்டங்கள் அனைத்திலும் கூட்டுச் செயற்பாடு குறைவாக இருந்தது. தனிமனித முனைப்பு அல்லது கட்சி முனைப்பு துருத்திக் கொண்டு தெரிந்தது. படைப்புத்திறன் இருக்கவில்லை. பழைய சலித்த அதே போராட்ட வழிமுறைகள். போலீசார் கைது செய்தபடியால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்திற்கு ஒரு கவனிப்பு கிடைத்தது. அதுவும் பிணை கிடைத்தவுடன் கொதிப்பு அடங்கிவிட்டது.

இவ்வாறு உலகின் கவனத்தை ஈர்க்கமுடியாத போராட்டங்களால் ஒரே ஒரு நன்மை உண்டு. குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களை ஓரளவுக்கு கூட்டிக் கட்டி வைத்திருக்க அது உதவும். ஆனால் அதைவிட ஆழமான பொருளில் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்ட மேற்படி போராட்டங்களால் முடிந்திருக்கிறதா?

புலம்பெயர்ந்து வாழும் ஒரு நண்பர் அண்மையில் கேட்டார்- ‘போராட்டம் என்று சொன்னால் தமிழ் மக்கள் எப்பொழுதும் வீதியிலே நிற்க வேண்டுமா? ஒரு மக்கள் கூட்டம் ஆண்டு முழுவதும் எதிர்ப்பு போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்க முடியுமா?” என்று. பொருத்தமான கேள்வி.

ஒர் உடனடிக் பிரச்சினையை முன்வைத்து நிகழும் மக்கள் போராட்டங்கள் அவற்றின் இலக்கை அடையும் வரை தொடர்வது தவிர்க்க முடியாது. உதாரணமாக டெல்லியில் நடந்த விவசாயிகளின் போராட்டம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலைக்கான ஒரு போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பாக அறவழிப் போராட்டம் என்று வரும்பொழுது ஆண்டு முழுக்க போராட முடியாதுதான். ஏன் அதிகம் போவான் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை நாள் போராடியிருக்கிறார்கள் என்பது இடைக்கிடை ஊடகங்களில் வெளிவரும். ஆனால் அப்போராட்டங்கள் எந்தளவு தூரத்துக்கு உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன? அல்லது எந்த அளவுக்கு சொந்த மக்களை சென்றடைந்திருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அறவழிப் போராட்டத்திலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டம் எனப்படுவது இறுதியிலும் இறுதியாக தேசத்தை நிர்மாணிப்பதுதான். தேசத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அடிப்படை மூலக்கூறுகளை பலப்படுத்துவது தான். அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவதுதான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கருநிலை அரசு இருந்தது. அது தேச நிர்மாணத்துக்கு வேண்டிய கட்டுமானங்களை ஏதோ ஒரு விகிதமளவுக்கு கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறு தேசநிர்மாணத்துக்கு தேவையான கட்டமைப்புகள் எவையும் கட்டியெழுப்பப்படவில்லை. பதிலாக அவ்வப் போது காட்டப்படும் சிறிய மற்றும் பெரிய எதிர்ப்புகளுக்கூடாக கட்சிகளைத்தான் கட்டியெழுப்பி வருகிறார்கள்.

எனவே தமிழ் மக்கள் போராட்டம் என்பதனை தனிய எதிர்ப்பு அரசியலாக மட்டும் சுருக்கி பார்க்காமல் அதைவிட பரந்தகன்ற அர்த்தத்தில் அதை தேச நிர்மாணமாக விளங்கிக் கொள்ளவேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டும் அடிப்படை அம்சங்களைப் பலப்படுத்தும் விதத்தில் உரிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக போராட்டத்திற்கான மக்கள் அமைப்பும் கட்டியெழுப்பப்பட வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்துகொண்டு தொலை இயக்கிமூலம் ஒரு மக்கள் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு.

தமிழ்க்கட்சிகளில் பெரும்பாலானவற்றிடம் மாணவ அமைப்புகள் இல்லை. யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் மத்தியில் தென்னிலங்கையில் இயங்கும் ஜேவிபி போன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் உண்டு. சிறிய அளவில் கட்டமைப்புகளும் உண்டு. ஆனால் போராடும் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கட்டமைப்புகள் கிடையாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் அவ்வாறு மாணவர் போராட்டத்திற்கூடாக மேலெழுந்த ஒருவர். ஆனால் அக்கட்சியிடமும் பலமான மாணவ அமைப்புக்கள் கிடையாது, அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான், பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலத்தைப் பலப்படுத்தி பிரம்மாண்டமானதாக கட்டமைக்க வேண்டும் என்ற அக்கறை கட்சிகளிடம் இருக்கவில்லை மாணவர்களிடமும் இருக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள கட்சிகள் எல்லாவற்றுக்கும் மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள் என்று வெவ்வேறு வயது மட்டங்களுக்கு ஏற்ப கட்டமைப்புகள் உண்டு. குறிப்பாக கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கொமியூனிஸ்ற் கட்சிக்கு இளையோர் மத்தியில் மூன்றுக்கும் குறையாத கட்டமைப்புகள் உண்டு. பள்ளி மாணவருக்கு ஒரு கட்டமைப்பு,பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, மாணவப் பருவத்தைக் கடந்தவர்களுக்கு ஒரு கட்டமைப்பு, என்றெல்லாம் கட்டமைப்புகள் உண்டு. ஆனால் தமிழ் கட்சிகளுக்கு அப்படியெல்லாம் கட்டமைப்புகள் இல்லை. ஆனால் ரோட்டரிக் கிளப் போன்றவற்றுக்கு அப்படிப்பட்ட கட்டமைப்புகள் உண்டு.

இப்பொழுது உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான அறிவிப்புகள் வந்தபின் பெண் வேட்பாளர்களைத் தேடி கட்சிகள் ஓடத்தொடங்கி விட்டன. கிராம மட்ட மகளிர் அமைப்புகள் பலமாக இருந்தால் அதற்குள் இருந்தே உள்ளூர் தலைமைத்துவங்கள் மேலெழுந்து வரும். அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான் தேர்தல் என்று வந்ததும் வேட்பாளர்களைத் தேடி அலையும் ஒரு நிலை. அதிலும் பெண்கள் பொறுத்து உள்ளூராட்சித் தேர்தல்களில் 25 விகிதம் பெண் வேட்பாளர்கள் இருக்க வேண்டும் என்று சட்ட ஏற்பாடு உருவாக்கப்பட்ட பின்னர்தான் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக இணைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்றும்படி பால் சமநிலையை பேண வேண்டும் என்று எத்தனை கட்சிகள் சிந்திக்கின்றன?

எனவே கடந்த 13 ஆண்டுகளாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியாத தமிழ்க்கட்சிகள் குறைந்த பட்சம் தமக்குத் தேவையான கட்டமைப்புக்களைக்கூட கட்டியெழுப்பவில்லை. கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விட்ட வெற்றிடத்தில்தான், புலம்பெயர்ந்த தமிழர்கள் போராட்டங்களை தொலைவிலிருந்து இயக்க முயற்சிக்கிறார்கள். மாணவர்கள் வேறாகவும் காட்சிகள் வேறாகவும் போராடுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிநபர்களாக ஆர்ப்பாட்டங்களுக்கு வருகிறார்கள். தமிழ் மக்கள் பார்வையாளர்களாக விலகிக் கொன்டேயிருக்கிறார்கள்?

•

# வங்குரோத்து அடைந்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்!

## அரசாங்கத்தை கேட்கிறார் கப்ரால்

கொழும்பு, பெப். 21

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தினால் நடுத்தர மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வார்கள் என்பதாலேயே ஐ. எம். எவ்வை நாங்கள் நாடவில்லை. வங்குரோத்து அடைந்து விட்டோம் என்ற தீர்மானத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளுக்கு அமையவே வரி மற்றும் சேவை கட்டணங்கள் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மின்சார கட்டண அதிகரிப்பு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் ஒரு பகுதியாக உள்ளது.

நிவாரணம் மற்றும் சேவை வழங்கலை மட்டுப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது. இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடு அல்ல. அபிவிருத்தி அடைந்து வரும் நாடு,மொத்த சனத் தொகையில் பெரும்பாலான மக்கள்



அரச நிவாரணங்களையும், இலவச சேவைகளையும் நம்பி உள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய இலவச சேவைகளை மட்டுப்படுத்தினால் சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். இதனால் தான் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள நாங்கள் அதிக ஈடுபாடு காட்டவில்லை.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் வெளிநாட்டு கையிருப்பு வீழ்ச்சியடைந்தது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அரசியல்வாதிகள் நாட்டை முடக்க அழுத்தம் கொடுத்தனர். அவர்களின் நோக்கத்துக்கு அமைய இறுதியில் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளாமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிடம் இரு தரப்பு மற்றும் பலதரப்பு அடிப்படையில் ஒத்துழைப்புக்கள் கோரப்பட்டன.

இவ்வாறான நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது. ஆகவே, அரச முறை கடன்களை மீள் செலுத்த முடியாது என அரசாங்கம் அறிவித்ததை தொடர்ந்து சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

இதனால் பொருளாதார பாதிப்பு மேலும் தீவிரமடைந்து சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் வெளிநாட்டு கடன்கள் முறையாக செலுத்தப்பட்டன.எந்த அடிப்படையில் கடன்மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தது என்பது இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. பாராளுமன்றத்திற்கும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே வங்குரோத்து என்ற தீர்மானம் மறுசீரமைக்கப்பட்டால் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்கலாம் - என்றார்.

(ஐ)

# 128 கிலோ கஞ்சா காரைநகரில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 21

காரைநகரில் நேற்று முன்தினம் 128 கிலோ (ஈர நிறை) கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்படை நடத்திய விசேட கண்காணிப்பு நடவடிக்கையிலேயே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படையின் எடித்தாரா -2 கடலில் தத்தளித்த மூன்று பயணப் பைகளை கைப்பற்றியது.

பயணப் பைகளில் 128 கிலோ மற்றும் 65 கிராம் (ஈரமான எடை) எடையுள்ள கேரள கஞ்சா நிரப்பப்பட்ட 42 பொதிகள் இருந்தன.

கடற்பரப்பில் கடற்படையினரின் தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கைகளால் கடத்தல்காரர்கள் இவற்றை கடலிலேயே விட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த மதிப்பு 4. 2 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று நம்பப்படுகின்றது. (ஐ)



இத்தாவில் புனித பார்பரா தேவாலயத்துக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்று மாலை நாட்டிவைத்தபோது...!

**கல்வி tv CHANNEL-1**

**21.02.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**கல்வி tv CHANNEL - 2**

**21.02.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தேர்தல் விடயத்தில் அரசு வெவ்வேறு செயல்பாடுகள்

*ரிஷாத் பதியுதீன் சாடல்*



திருமலை, பெப். 21

உள்ளூராட்சி மன்ற தேர்தல் விடயத்தில், அரசாங்கம் வேறாகவும் தேர்தல் ஆணைக்குழு வேறாகவும் செயற்பட்டு, இரு தரப்புக்களுக்கிடையில் ஒரு போராட்டம் போல தெரிகிறது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

தம்பலகாமம் - முள்ளிப் பொத்தானை பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தேர்தலை பிற்போடுவது ஜனநாயக விரோதமாகும். உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

மக்களின் எதிர்பார்ப்பும் தேர்தலை நடத்த வேண்டும். பணம் இல்லை என்று சாட்டுப் போக்கு சொல்லி ஏமாற்றாமல், மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக இந்தத் தேர்தல் மூலம் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# முஸ்லிம் கட்சி தலைமைகளும் தேர்தலுக்கு பயப்படுகிறார்கள்

**இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சுட்டிக்காட்டு**



அம்பாறை, பெப். 21

**தற்போது தேர்தல் நடைபெறுமா இல்லையா என்ற சந்தேகம் காணப்படுவதாகவும் ஆளுங்கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்குயின்மை காரணமாக தேர்தலை நடத்த அச்சப்படுவதாகவும் தேர்தலை நடத்த அரசாங்கம் பயப்படுவதைப் போன்று முஸ்லிம் தலைமைகளும் தேர்தலுக்கு பயப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

கிண்ணியா அண்ணல் நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்- மக்கள் மத்தியில் வர முடியாத ஆளும் கட்சியினர் ஆரம்பத்தில் அதிகாரிகளை அச்சமூட்டி தேர்தலை பிற்போட முயற்சித்தார்கள். தற்போது பெற்றோல், மின் கட்டணங்கள், பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களை அச்சமூட்டி தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றனர்.

நமது நாடு பொருளாதார சிக்கலில் இருப்பதற்கு பிரதான காரணம் ராஜபக்ஷவினர் அவர்களுடைய அதிகாரத்தை வைத்து செய்த செயற்பாடுகளும்தான் இற்குக் காரணம்.

69 இலட்சம் மக்கள் வாக்களித்து வழங்காத அதிகாரத்தை 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவளித்து சில முஸ்லிம் தலைமைகள் வழங்கின. இந்த தேர்தல் மூலம் 20 இற்கு வாக்களிந்தவர்களுக்கு மக்கள் பாடம் படிப்பிக்கவேண்டும்-என்றார். (அ)

# கல்முனை பொது நூலகத்துக்கு தனிநபரின் பெயர் சுட்டுவதா?

**மாநகரசபை தமிழ் உறுப்பினர்கள் போர்க்கொடி**

அம்பாறை, பெப். 21

கல்முனை பொது நூலகத்திற்கு தனிநபரின் பெயரைச் சூட்ட முனைவதை வன்மையாக கண்டிக்கிறோம். பெயரை மாற்றினால் இன முரண்பாடு உருவாக வாய்ப்புள்ளது என கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகியோர் தெரிவித்தனர்.

அவர்கள் கருத்து தெரிவிக்கையில்-கல்முனை மாநகர சபை இம்மாத அமர்வில் கல்முனை பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சரான ஏ.ஆர்.எம் மன்சூரின் பெயரை சூட்டுவதாக மாதாந்த நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

அதுவும் அமர்வுக்கு முன்னர் உறுப்பினர் ஹென்றி போன்றவர்களுடன் ஆனால் ஏனைய தமிழ் உறுப்பினர்களை அழைக்காமல், மூடிய அறைக்குள் பேசியதாக அறிகிறோம்.

கடந்த காலங்களில் முன்னாள் அமைச்சராக செயற்பட்ட, மன்சூர் இன மத பேதங்களின்றி சிறப்பான சேவைகள் செய்தவர். தமிழ் மக்களுக்கும் பல வழிகளில் உதவியவர். அவர் போன்று ஒரு முஸ்லிம் தலைவர் இன்றில்லை. அந்த குறைபாடுதான் இன்று இனமுரண்பாட்டுக்கு காரணம். அவர் நல்லவர். அதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

இருந்தபோதிலும் தற்போது எதிர்வரும் தேர்தலை குறிவைத்து சிலர் இவ்விடயத்தை அரசியலாக்கி மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். அதன் வெளிப்பாடே இந்தத் தனிநபர் பிரேரணையாகும்.

கல்முனை பொது நூலகமானது இரு சமூகத்தை சேர்ந்தவர்களின் பொதுச்சொத்து. இந்த நூலகத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்படுவதைச் சிலர் மறைமுகமாக முன்னெடுக்கின்றனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சில அரசியல் வாதிகளே தங்களது அபிலாசைகளை நிறைவேற்ற இவ்வாறு செயற்படுகின்றனர்.தேர்தல் காலங்களில் தான் இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். கல்முனை மாநகர கட்டடத்தில இயங்குகின்ற நூலகமானது இதுவரை பெயர்ப்பலகை இல்லாமல் இயங்கி வருவதை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அண்மையில் அங்கு மாநகர சபை பெயர்ப்பலகையை நாட்ட ஏற்பாடு இடம்பெற்றது. அதனை ஒருவர் கண்டு அடித்து விரட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அது கல்முனை பொது நூலகம் என்றே இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. அதுவே தொடரவேண்டும் என்பது அனைவரினதும் அபிலாசையாகும்.

ஆனால், ஒரு தனி நபரின் பெயரை இந்த நூலகத்திற்கு ஏன் தற்போது சூட்ட முயற்சிக்கின்றீர்கள் என கேட்கின்றோம். தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த செயற்பாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம்.ஏனெனில் இனங்கள் இரண்டும் ஒன்றுபட்டது தான் கல்முனை பிரதேசம். கல்முனை மாநகர சபை இரு சமூகத்திற்கும் சொந்தமானது. எனவே இனியாவது இச்செயற்பாடுகளை தவிர்த்து இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தாதீர்கள் என கேட்டுக் கொள்கின்றோம்-என்றனர். (அ)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக டாக்டர் பரீத்



அம்பாறை, பெப். 21

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக டாக்டர். ஏ.எல்.பரீத் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள டாக்டர் பரீத் 35 வருட காலம் வைத்திய துறையில் அளப்பரிய சேவையாற்றி வருவதுடன் தற்சமயம் கொழும்பு நவலோக வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியாகவும் சேவையாற்றி வருகின்றார்.

மேலும் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை, சுகாதார அமைச்சின் தனியார் வைத்தியசாலைகள் அபிவிருத்திப் பிரிவு, சுகாதார அமைச்சின் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவு என்பவற்றின் பணிப்பாளராகவும் கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் ஏற்கனவே கடமையாற்றி தனது சிறந்த சேவையினை வெளிப்படுத்தியிருந்தார்.

டாக்டர் பரீத் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் இந்த வைத்தியசாலையின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் பெரும் பங்காற்றிய ஒருவர் என்பதுடன் இதேவேளை பல்வேறு சமூகப் பணிகளிலும் முன்னின்று உழைத்துவரும் ஒருவரும் ஆவார். (அ-06)

# திருக்கோவில் மக்களுக்கு 2ஆம் கட்ட உலர் உணவு



அம்பாறை, பெப். 21

சமகால பொருளாதார நெருக்கடியினால் மிகவும் பாதிக்கப்பட்ட திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நான்கு கிராமங்களில் வாழும் ஒரு தொகுதி மக்களுக்கு இரண்டாம் கட்ட உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் இந்நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலகம் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி, உமிரி, காயத்திரி கிராமம், விநாயகபுரம், திருக்கோவில் ஆகிய கிராமப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கு ஒரு குடும்பத்துக்கு தலா 10450.00 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் திட்ட இணைப்பாளர் அனிதா செல்வகுமார், மீளாய்வு கண்காணிப்பு உத்தியோகத்தர் திருமதி கிரிஜா, திருக்கோவில் கள உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு நிவாரணங்களை வழங்கினர்.

தெரிவு செய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கு ஒரு குடும்பத்துக்கு 10450.00 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதி அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திட்ட இணைப்பாளர் மற்றும் திருக்கோவில் பிரதேச களச் செயலாளி மற்றும் திருக்கோவில் குழு தலைவிமார் ஆகியோரினால் வழங்கப்பட்டது. (அ)

### உளவு பலூன் சர்ச்சைக்கு பின்

# அமெரிக்க-சீன வெளியுறவு அமைச்சர்கள் நேரில் பேச்சு



நியூயோர்க், பெப். 21

உளவு பலூன் சர்ச்சைக்கு பின்னர் அமெரிக்க-சீன வெளியுறவு அமைச்சர்கள் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அமெரிக்காவில் இந்த மாத ஆரம்பத்தில் மொன்டானா மாகாண வான்பரப்பில் இராட்சத பலூன் ஒன்று பறப்பதை அவதானித்த ராணுவம் அது, உளவு பார்ப்பதற்காக சீனாவால் அனுப்பப்பட்ட பலூன் என்று குற்றம்சாட்டியது.

ஆனால் சீனாவோ வானிலை ஆய்வுக்காக அனுப்பப்பட்ட பலூன் காற்றின் வேகத்தில் திசை மாறி அமெரிக்காவுக்குள் சென்றுவிட்டதாகக் கூறியது.

எனினும் அதை ஏற்க மறுத்த அமெரிக்கா, போர் விமானம் மூலம் அந்த பலூனை சுட்டு வீழ்த்தியது. ஏற்கனவே இரு நாடுகளும் கீரியும், பாம்புமாக மோதிக்கொண்டிருக்கும் தருணத்தில் இந்த விவகாரம் நாடுகளிடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது.

உளவு பலூன் பிரச்னைகளில் இரு நாடுகளும் தொடர்ந்து வார்த்தை மோதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஜேர்மனியில் நடைபெற்ற முனிச் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன் மற்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி ஆகிய இருவரும் மாநாட்டின் இடையே நேரில் சந்தித்துப் பேசினர்.

உளவு பலூன் பிரச்னை உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் காரசாரமாக விவாதித்தனர். உளவு பலூன் பிரச்னையை குறிப்பிட்டு பேசிய பிளிங்கன் இது அமெரிக்க இறையாண்மை மற்றும் சர்வதேச சட்டத்தை மீறும் பொறுப்பற்ற செயல் எனக் கூறி கண்டனம் தெரிவித்தார்.

மேலும் உக்ரைன் மீது போர் நடத்தி வரும் ரஷ்யாவுக்கு சீனா பொருள் உதவி வழங்கக்கூடாது எனவும், மீறி வழங்கும் பட்சத்தில் பொருளாதார தடைகள் உட்பட மோசமான பின்விளைவுகளை சந்திக்கவேண்டியிருக்கும் என சீனாவை எச்சரித்தார்.

சீனாவுடன் ஆரோக்கியமான போட்டியை மட்டுமே விரும்புவதாகவும், மோதலையோ அல்லது பனிப்போரையோ மேற்கொள்ள அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அன்ரனி பிளிங்கன் வலியுறுத்தினார். (அ)

# அணுசக்தி தாக்குதலை நடத்திவிட்டு எம் மீது பழிபோட உக்ரைன் திட்டம்!

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டு



மொஸ்கோ, பெப். 21

**ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய கூட்டத்துக்கு முன்னதாக ரஷ்யா மீது பழியை சுமத்த உக்ரைன் தனது பிராந்தியத்தில் அணுசக்தி தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளதாக, ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.**

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பெயரிடப்படாத ஐரோப்பிய நாட்டிலிருந்து கதிரியக்கப் பொருட்கள் உக்ரைனுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன, மேலும் உக்ரைன் ஒரு பெரிய அளவிலான ஆத்திர மூட்டலுக்கு தயாராகி வருகின்றது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் உள்ள அபாயகரமான கதிரியக்க வசதிகள் மீது ரஷ்யாவின் இராணுவம் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியதாக குற்றம் சாட்டுவது ஆத்திரமூட்டலின் நோக்கம், இது கதிரியக்கப் பொருட்கள் கசிவு மற்றும் அப்பகுதியில் மாசுபடுவதற்கு வழிவகுத்தது என்று அது மேலும் கூறியது.

உக்ரைனும் அதன் கூட்டாளிகளும் இத்தகைய குற்றச்சாட்டுகளை தவறான தகவல்களை பரப்புவதற்கான இழிந்த முயற்சிகள் என்று நிராகரித்துள்ளனர், மேலும் உக்ரைனைக் குற்றம் சாட்டும் முயற்சியில் ரஷ்யா தாக்குதல்களைத் திட்டமிடுவதாக குற்றம் சாட்டியுள்ளது.

ரஷ்ய ஏவுகணை அலகுகளைத் தாக்கும் உக்ரைனின் திறனை, விமானம் உயர்த்தும் என்று கூறி, எவ்-16 போர் விமானங்களை அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு உக்ரைனிய அதிகாரிகள் அமெரிக்க அரசியல்வாதிகளை வலியுறுத்தியதால் ரஷ்யாவின் இந்த குற்றச்சாட்டுகள் வந்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா உட்பட உக்ரைனிய அதிகாரிகளுக்கும், அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகக் கட்சியினர் மற்றும் குடியரசுக் கட்சியினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் முனிச் பாதுகாப்பு மாநாட்டின் போது, வார இறுதியில் இந்த பரப்புரை வந்தது.

(அ)

# இருளில் மூழ்கியது கியூபா!



ஹவானா, பெப். 21

கரிபீயன் தீவு நாடுகளில் ஒன்றான கியூபாவில் பெரும்பாலான மின் உற்பத்தி நிலையங்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இயங்கி வருகின்றன.

இதனால் அந்த மின்நிலையங்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டு நாடு தழுவிய அளவில் மின் வெட்டு ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் தலைநகர் ஹவானாவில் இருந்து 100 கி.மீ. தொலைவில் இருக்கும் மடான்சாஸ் மாகாணத்தில் உள்ள மின் உற்பத்தி ஆலையில் பெரிய அளவில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

இது மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதன் காரணமாக நாட்டில் உள்ள 15 மாகாணங்களில் 11 மாகாணங்களில் மின்வெட்டு ஏற்பட்டு இருளில் மூழ்கின. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியுள்ளது.

மின் விநியோகம் படிப்படியாக மீட்டமைக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக கடந்த 13 ஆம் திகதி கரும்பு தோட்டத்தில் ஏற்பட்ட தீ மின் இணைப்புகளை சேதப்படுத்தியதால் நாட்டின் அதிகமான பகுதிகளில் மின்சாரம் இல்லாமல் போனது குறிப்பிடத்தக்கது.

(அ)

# பிரான்ஸில் மக்கள் முன்னிலையில் சுற்றுலாப் பயணியை தாக்கிய சுறா!

## அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு

பாரிஸ், பெப். 21

பிரான்ஸின் பசிபிக் பிராந்தியமான நியூ கலிடோனியாவில் பார்வையாளர்கள் முன்னிலையில் சுறா தாக்கி, சுற்றுலாப் பயணி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

59 வயதான அவுஸ்ரேலிய சுற்றுலா பயணி, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நௌமியாவில் உள்ள பிரபலமான கடற்கரையில், கரையிலிருந்து சுமார் 150 மீ (500 அடி) நீந்திக் கொண்டிருந்தபோது, சுறா தாக்கி, அவர் உயிரிழந்தார்.

அவர் பலமுறை கடித்து, கால் மற்றும் கைகளில் பலத்த காயம் அடைந்து, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மூன்று வாரங்களில் சாட்டோ- ரோயல் கடற்கரைக்கு அருகில் இது மூன்றாவது சுறா தாக்குதல் ஆகும்.

அருகில் பயணித்த இரண்டு பேர் அந்த நபரை மீண்டும் கடற்கரைக்கு அழைத்து வந்து, அவசர சேவைகள் உதவியுடன் அவரை உயிர்ப்பிக்க முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை.

சுறா தாக்குல் நடத்திய நேரத்தில் பலர் தண்ணீரில் இருந்தனர் மற்றும் தாக்குதலை நேரில் பார்த்தனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதிகாரிகள் அப்பகுதியில் உள்ள பெரும்பாலான கடற்கரைகளை மூடிவிட்டனர், மேலும் அருகிலுள்ள நீரில் சுறாக்களைப் பிடிக்க உத்தரவிட்டனர்.

வனுவாட்டுவின் தெற்கே அமைந்துள்ள நியூ கலிடோனியா, அவுஸ்ரேலியாவிற்கு கிழக்கே சுமார் 1,200 கிமீ (750 மைல்) தொலைவில் உள்ளது.

(அ)

# அடுத்த வார இறுதியில் உக்ரைனுக்கு கவச வாகனம் அனுப்புகிறது பிரான்ஸ்!



பாரிஸ், பெப். 21

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு உறுதியளித்த கவச வாகனங்களை அடுத்த வார இறுதிக்குள் வழங்கத் தொடங்கும் என்று பிரான்ஸ் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

ஏ.எம்.எக்ஸ்-10 வகை மற்றும் சில நேரங்களில் “லைட் டாங்கிகள்” என்று விவரிக்கப்படும் வாகனங்கள் ஆயுதமேந்திய உளவு மற்றும் எதிரி டாங்கிகள் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

முதல் வாகனங்கள் “அடுத்த வார இறுதிக்குள் உக்ரைனுக்கு அனுப்பப்படும்” என்று பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னு லீ பரிஸியன் செய்தித்தாளின் ஞாயிறு பதிப்பில் தெரிவித்தார்.

முதல் தொகுதியில் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட அவர் மறுத்துவிட்டார், ரஷ்யாவிற்கு எந்த “மூலோபாய தகவல்களையும்” கொடுக்க விரும்பவில்லை என்று கூறினார்.

ஏ.எம்.எக்ஸ்-10 டாங்கிகளின் எடை 20 தொன்கள். பிரெஞ்சு ஆயுதப் படைகள் 1970களில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட ஏ.எம்.எக்ஸ்-10 களுக்குப் பதிலாக ஜாகுவார் எனப்படும் நவீன வாகனங்களைக் கொண்டு வரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜனவரி தொடக்கத்தில் பல மாத தயக்கத்துக்குப் பிறகு ஏ.எம்.எக்ஸ்-10 களை அனுப்புவதாக உறுதியளித்தார்.ஏனெனில் அதிகரித்த ஆயுத விநியோகங்கள் அணு ஆயுதம் கொண்ட ரஷ்யாவுடனான மோதலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக பிரான்ஸ் ஆரம்பத்தில் தயங்கியது.

ஏ.எம்.எக்ஸ்-10 இல் உக்ரைனியக் குழுவினரின் பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சி முடியும் தறுவாயில் உள்ளது.

மார்ச் மாதம் தொடங்கி, ஒவ்வொரு மாதமும் 600 உக்ரைன் துருப்புக்கள் பயிற்சி பெறுவார்கள்- என்றார்.

(அ)

*இருபது - 20 உலகக் கிண்ணம்:*

# நியூசியிடம் இலங்கை தோல்வி தொடரிலிருந்தும் வெளியேற்றம்!



*பேர்ல், பெப். 21*

நியூசிலாந்திடம் 102 ஓட்டங்களால் படு தோல்வியடைந்த இலங்கை மகளிர் அணி, உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது.

தென்னாபிரிக்காவில் மகளிர் உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் இலங்கை - நியூசிலாந்து மகளிர் அணிகள் மோதின.

இரு அணிகளின் இறுதி லீக் போட்டி என்பதால் பலத்த போட்டி எதிர்பார்க்கப் பட்டது. எனினும், நியூசிலாந்து அணி மிகப்பெரிய வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை இன்னமும் தக்கவைத்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 162 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப விக்கெட்டில் பேர்னடின் பெஸூய் டென்ஹூட்டுடன் 46 ஓட்டங்களைப் பகிர்ந்த சுஸி பட்ஸ், 2ஆவது விக்கெட்டில் அமேலியா கேருடன் மேலும் 110 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூசிலாந்து அணியை பலமாக்கினார்.

அமேலியா கேர் 48 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்களையும் சுஸி பட்ஸ் 49 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 56 ஓட்டங்களையும் பேர்னடின் பெஸூய்டென்ஹூட் 20 பந்துகளில் 5 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

163 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

15.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

அணித் தலைவி சமரி அத்தபத்து (19), மல்ஷா ஷெஹானி (10) ஆகிய இருவரே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். (ஐ)

## தொடரின் நடுவிலேயே நாடு திரும்பிய கம்மின்ஸ்!


*புதுடில்லி, பெப். 21*

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

கம்மின்ஸ் தலைமையிலான அந்த அணி முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் கம்மின்ஸ் நாடு திரும்பியுள்ளார். குடும்ப சுகாதார பிரச்னை காரணமாக அவர் அவுஸ்திரேலியா புறப்பட் டுள்ளார்.

மார்ச் 1ஆம் திகதி இந்தூரில் தொடங்கும் 3ஆவது டெஸ்டில் அவர் அணியோடு இணைந்து கொள்வார். ஒருவேளை அவர் வரவில்லையென்றால் ஸ்ரீவ் ஸ்மித் அணிக்கு தலைமை தாங்குவார்.



## 100 பந்துகள் கிரிக்கெட் தொடர் தக்கவைக்கப்பட்டார் ஹசரங்க!




*மன்செஸ்டர், பெப். 21*

'100 பந்து' கிரிக்கெட் தொடருக்கான வீரர்களுக்கான ஏலம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான வனிந்து ஹசரங்கவை தக்க வைப்பதற்கு மன்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள '100 பந்து' தொடரின், சகல அணிகளும் தங்கள் அணிகளில் தக்க வைக்கப்பட்ட வீரர்களின் விபரத்தை வெளியிட்டுள்ளன.

இதன்படி, இந்த ஆண்டு '100 பந்து' தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்கவை தமது அணியில் தொடர்ந்தும் தக்கவைப்பதாக அறிவித்துள்ளது.

வனிந்து ஹஸரங்க தவிர, லியம் லிவிங்ஸ்டன், சதாப் கான், கிளென் மக்ஸ்வெல், ஜோஸ் பட்லர், சுனில் நரைன், ரஷீத் கான், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகியோரை தத்தமது அணிகளில் தக்க வைக்க அந்தந்த அணி நிர்வாகங்கள் தீர்மானித்துள்ளன. (ஐ)

## கட்டார் ஓப்பன் ரென்னிஸ் இகா ஸ்வியாரெக் சம்பியன்!

*டோஹா, பெப். 21*

ஜெசிகாவை வீழ்த்தி கட்டார் ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் இகா ஸ்வியாரெக்.

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் போட்டி டோஹாவில் நடந்தது. கடந்த சனிக்கிழமை பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப்போட்டி நடைபெற்றது.

இதில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக், அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலாவுடன் மோதினார்.

பரபரப்பான இந்த போட்டியில் ஸ்வியாரெக் 6-3, 6-0 என்ற செற் கணக்கில் எளிதாக வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். (ஐ)




## மெஸ்ஸியின் கோலால் வென்றது பி. எஸ். ஜி.!




*பாரிஸ், பெப். 21*

பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) அணிக்காக 95ஆவது நிமிடத்தில் கிடைத்த ப்றீகிக் வாய்ப்பை கோலாக மாற்றி அணியை வெற்றி பெற செய்தார் மெஸ்ஸி. இந்தப் போட்டியில் நெய்மர் மற்றும் எம்பாப்பே என இருவரும் கோல் பதிவு செய்திருந்தனர். அதில் எம்பாப்பே 2 கோல்களை பதிவு செய்திருந்தார்.

லீக் 1 தொடரில் ஞாயிறு அன்று லில்லே அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 4-3 என்ற கோல் கணக்கில் பி. எஸ். ஜி. அணி வெற்றி பெற்றது.

புள்ளிப்பட்டியலில் பி. எஸ். ஜி. அணி முதலிடத்தில் உள்ளது. வெவ்வேறு தொடர்களில் தொடர்ச்சியாக மூன்று தோல்விகளை தழுவிய நிலையில் பி. எஸ். ஜி. பெற்ற முதல் வெற்றி இது. இதேபோல பி. எஸ். ஜி. அணிக்காக மெஸ்ஸி பதிவு செய்துள்ள 11ஆவது கோலாக இது அமைந் துள்ளது.

ஆட்டத்தின் பரபரப்பான கட்டத்தில் இலாவகமாக பந்தை தனது இடது காலால் வலைக்குள் தள்ளி கோலாக மாற்றி இருப்பார் மெஸ்ஸி. அது இந்தப் போட்டியில் பி. எஸ். ஜி. பதிவு செய்த நான்காவது கோல். இதன் மூலமாக அந்த அணி வெற்றி பெற்றது.

"இது எங்களது சிறந்த ஆட்டம் அல்ல. நாங்கள் சில தவறுகளை செய்தோம். இருந்தாலும் எங்கள் அணி பல்வேறு வீரர்களை கொண்ட ஒரு வித்தியாசமான அணி என்பதை இந்த வெற்றியின் மூலம் நிரூபித்துள்ளோம்" என எம்பாப்பே போட்டியின் முடிவில் தெரிவித்திருந்தார். (ஐ)

# தேர்தலை ஒத்திப்போடுவது அரசமைப்பை மீறும் செயல்

## எரான் விக்ரமரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

**தேர்தலை நடத்தப்போவதில்லை என ஜனாதிபதி மறைமுகமாக தெரிவித்துள்ளமை அரசியல் அமைப்பு மற்றும் தேர்தல் தொடர்பான சட்டங்களை மீறும் நடவடிக்கை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.**



ஒரு நாட்டுக்கு சட்டத்தின் ஆட்சி முக்கியமானது என குறிப்பிட்ட அவர், நிர்வாகத்தைச் சீர்குலைப்பதன் மூலம் சர்வதேச உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் இதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2023ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதற்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன குறிப்பிட்டார்.

2010 மே மாதத் தேர்தலுக்கான அச்சு செலவுகள் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களுக்குப் பின்னரும் 2015 பொதுத் தேர்தலுக்கான செலவுகள் அந்த வருடம் ஒக்ரோபரிலும் 2019 ஜனாதிபதித் தேர்தல் செலவுகள் 8 மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டமையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அச்சிடுவதற்கு தேவையான அனைத்து ஆதாரங்களும் இருந்தும், முன்கூட்டியே பணம் செலுத்தாமல் வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என அறிவிப்பது, தேர்தலை ஒத்திவைக்க தடைகளை ஏற்படுத்தும் தந்திரம் என்றும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

# தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும் வேட்புமனுக்கள் செல்லுபடியாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சித் தேர்தலை உரிய தினத்தில் நடத்த முடியாமல்போனாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் வாக்களிப்பு இடம்பெறும் வரை செல்லுபடியாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு பொது தேர்தலும் இவ்வாறே நடத்தப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம், நிதி இல்லாத காரணத்தினால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உறுதியளித்தவாறு நடத்த முடியாமல் போகும் நிலை ஏற்படும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரியவாறு நடத்த நடவடிக்கை எடுப்பதாக, தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி உறுதிப்பாட்டை வழங்கியிருந்தது.

எவ்வாறிருப்பினும், அந்த உறுதிமொழிக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரை நிதி கிடைக்கவில்லை என மனு ஒன்றின் மூலம் உயர்நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (அ)

# மாணவர்களுக்கு போதை பாக்கு விற்றவர் கோண்டாவிலில் கைது!

யாழ்ப்பாணம், பெப். 21

கோண்டாவில் பகுதியில், மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் கலந்த பாக்கு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கோண்டாவில் பகுதியில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் கலந்த பாக்கு விற்பனை செய்யப்படுவதாக கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை மடக்கி சோதனை செய்த போது, 750 கிராம் போதை கலந்த பாக்கு அவரிடமிருந்து மீட்கப்பட்டது.

இதையடுத்து சந்தேகநபரை கைது செய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சஜித்தை விவாதத்துக்கு அழைக்கின்றார் அனுர!

கொழும்பு, பெப். 21

இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான உத்திகள் குறித்த விவாதிக்க தயார் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்து விவாதத்தில் தன்னோடு நேருக்கு நேர் கலந்துகொள்ளுமாறு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அவர் சவால் விடுத்துள்ளார்.

சாத்தியமான தீர்வுகளைப் பற்றி விவாதிக்க இரு கட்சிகளும் ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடவேண்டும் என அனுரகுமார திஸாநாயக்க கூறினார்.

உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப 2000, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி பல செயற்திட்டங்களை வெளியிட்டது என் றும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.



பாரம்பரிய அரசியல் பற்றி பேசி சேறு பூசுவதை நிறுத்தி, பொருளாதார கொள்கைகள் குறித்த வெளிப்படையான விவாதத்துக்கு வருமாறு அனுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார்.

இருவரும் இறுதியாக 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது நேருக்கு நேர் விவாதத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# களனி பல்கலை ஆர்ப்பாட்டம் பிக்குகள் உட்பட 6 பேர் கைது!

கொழும்பு, பெப். 21

களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின்போது பிக்குகள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு பிக்குகளும் இரண்டு மாணவர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் கூறினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்தப் போராட்டம் பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்து ஆரம்பமாகி களனி பிரதான வீதியில் நுழைந்த பின்னர் பொலிஸார் நீர் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கலைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சில கடுமையான தீர்மானங்களுக்கு சர்வதேச நாணய நிதியமே காரணம்

## நிலைமையை விளக்குகின்றார் ருவான்

கொழும்பு, பெப். 21

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே வரி அதிகரிப்பு உட்பட சில கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது என ஐக்கிய தேசிய கட்சி பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.



எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களை இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வங்குரோத்து நிலைமையை அறிந்துகொண்டு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பணியாற்றவேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் ருவான் விஜேவர்த்தன கூறினார்.

தேர்தலை நடத்துவதற்குக் கூட பணம் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் பணம் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டி தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த இவ்வாறான கடுமையான தீர்மானங்கள் சரியே என மக்கள் இந்த வருட இறுதியில் புரிந்துகொள்வார்கள் என்றும் ருவான் விஜேவர்த்தன குறிப்பிட்டார். (அ)

# நாணய நிதியத்திடமிருந்து சமிக்ஞை கிடைத்ததும் அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு, பெப். 21

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைத்தவுடன் அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பில்லியன் டொலர் கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு மார்ச் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கிடைக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் கோட்டபயவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை மாற்றுமாறு ஜனாதிபதிக்கு நெருக்கமான நபர்கள் மற்றும் அமைப்புகள் கோரியுள்ளனர்.

விளையாட்டு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, ஊடகத்துறை, துறைமுகம், தொழில் அமைச்சுப் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கியை ஒலிக்கச் செய்த சந்தேக நபர் கைது!

கிளிநொச்சி, பெப். 21

களியாட்ட நிகழ்வில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கியை ஒலிக்கச் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் களியாட்ட நிகழ்வில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

கற்றல் நடவடிக்கை மற்றும் நோயாளருக்கு இடையூறு ஏற்படக்கூடிய வகையில் ஒலிபெருக்கியை ஒலிக்கச் செய்த குற்றச்சாட்டில் ஒலிபெருக்கியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் ஒலிபெருக்கிச் சாதன பொருட்கள் அனைத்தும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜப்பானிய...

செய்து தங்கள் பணிமனைகளை மூடவும் இந்த நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

மிற்சுபிஷி நிறுவனம் மார்ச் மாதத்துடன் தனது பணிமனையை மூடுகிறது. இந்த நிறுவனம், இரும்பு மற்றும் இரசாயன பொருட்கள் வர்த்தகம், மின் உற்பத்தி நிலையங்களுக்கான பொறியியல் மற்றும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டது. செயல்பாட்டிலுள்ள திட்டங்களை அயல் நாடுகளிலுள்ள நிறுவன ஊழியர்கள் மூலம் நிர்வகிக்க இந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதேநேரம், பொறியில் குழுவான தாய்சே 46.2 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 16 ஆயிரத்து 724 கோடி ரூபாய் பெறுமதியான ஒப்பந்தம் உட்பட பல நிர்மாண ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளது. இந்த நிறுவனமும் அயல் நாடுகளிலுள்ள ஊழியர்கள் மூலம் நடைமுறையிலுள்ள ஒப்பந்தப் பணிகளை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது.

முன்னதாக, ஜேர்மன் நாட்டின் நிறுவனங்களும் நாட்டிலிருந்து வெளியேறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், ஜப்பான் நிறுவனங்களின் வெளியேற்றம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாராளுமன்றத்தை...

பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபையின் தலைமை பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அத்துடன்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. தேர்தலை நடத்த வேண்டுமா என்பதை நிதி அமைச்சர் தனிப்பட்ட காரணிகளை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கிறார். பாராளுமன்றத்தின் நிதி அதிகாரம் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மக்கள் மத்தியில் செல்ல ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன தயார் இல்லை என்ற காரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிமன் றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஆரம்பத் தில் இருந்து தடை ஏற்படுத்தி வருகிறார்.

வெற்றி பெறும் போது தேர்தலை நடத்துவதும் - தோல்வியடையும் சூழல் காணப்படும் போது தேர்தலை பிற்போடுவதும் உண்மையான ஜனநாயகம் அல்ல. அரசமைப்பின் பிரகாரம் காலத்துக்கு காலம் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிதியமைச்சின் செயலாளர் அரசமைப் புக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதியின் தனிப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுகிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம். இலங்கையில் மக்களாணையுடன் அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் என சர்வதேசம் குறிப்பாக சர்வதேச நாணயம் நிதியம் வலியுறுத்தியுள்ளது. இவ்விடயத்தை ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ நாட்டு மக்களுக்கு அறிவிக்கவில்லை.

ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீட்டுக்கு அமைய நாட்டின் சனத்தொகையில் 90 சதவீதமானோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையி லான அரசாங்கத்தை முழுமையாக புறக்கணித்துள்ளார்கள். மக்களாணை இல்லாத அரசாங்கத்திற்கு சர்வதேசம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது.

பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் தற்போது ஜனாதிபதி வசமாக்கப்பட்டுள்ளது. ஆகவே, தேசிய மற்றும் சர்வதேசத்தின் வலியுறுத்தலுக்கு அமைய பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவது சிறந்த தீர்வாக அமையும் - என்றார். (ஐ)

## கடன்...

இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதற்கு பதிலளித்த சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் 2022, 2023 ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டிய கடனை நீடிக்க விருப்பம் தெரிவித்து, இலங்கையின் கடனை நிலைநிறுத்துவதற்கான கடிதத்தை சீனா ஏற்கனவே இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த காலகட்டத்தில், இலங்கை ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை, இது குறுகிய கால கடன் அழுத்தத்தை குறைக்க இலங்கைக்கு உதவுகிறது. இலங்கையுடன் ஒரு நடுத்தர மற்றும் நீண்ட கால கடனை அகற்றும் திட்டத்தை நட்புரீதியில் பேச்சு நடத்த இந்த சாளரத்தை பயன்படுத்த நாங்கள் தயாராக உள்ளோம், மேலும் இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மேம்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்” என்றும் வாங் கூறியுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்வின்...

ஏற்படுவதற்கு இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடவேண்டும் என 2021லேயே யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அந்தச்சமயம் மத்திய வங்கியின் ஆளுநராக பணியாற்றியவர் அதனை ஏற்க மறுத்ததால் அது தாமதமானது - என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## பாராளுமன்றை...

தீர்மானம் மூலம் கோராத பட்சத்தில் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020 மார்ச்சில் பாராளுமன்ற தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார். எனினும், கோவிட் -19 தொற்று பரவலால் 2020 ஓகஸ்ட் 5 ஆம் நாள் தேர்தல் நடைபெற்றது. இதன்படி, ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியான கோட்டாபாய ராஜபக்ஷ தலைமையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு அந்த வருடம் ஓகஸ்ட் 20 ஆம் திகதி கூடியது.

முதல் அமர்வு இடம்பெற்று நள்ளிரவுடன் (இன்று) இரண்டு வருடங்களும் ஆறு மாதங்களும் நிறைவடைந்தது. எனவே, கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலின் பின்னர் ஜனாதிபதியாக (அரசமைப்பு மூலம்) பதவியேற்ற ஜனாதிபதிக்கு தற்போது பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் கிட்டியுள்ளது. (ஐ)

## தமிழ்...

இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த சிவக்கொழுந்து கந்தசாமி என்ற கால்நடை வளர்ப்பாளரே பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, தங்கள் பகுதியில் வெலிஓயாவை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி நுழைந்து கால்நடைகளை திருடி வருகிறார் கள் என்றும் தடுக்க முனைபவர்களை அவர்கள் கடுமையாக தாக்குகின்றனர் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவ்வா றான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவ்வாறான சம்பவங்கள் இனங்களிடையே முறுகலைத் தோற்றுவிக்கும் அபாயம் எழுந்துள்ளது என்றும் தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் முல்லைத்தீவு அரச அதிபரிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, பெரும்பான்மையினத்தவர்களின் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவரை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் மருத்துவமனையில் சென்று பார்வையிட்டுள்ளார். (ஐ)

# வீட்டின் கதவை உடைத்து 16 பவுண் நகைகள் களவு

யாழ்ப்பாணம், பெப். 21

பூட்டியிருந்த வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 16 தங்க பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காடு - கட்டைப்பிராய் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியையான வீட்டின் உரிமையாளர் இரண்டு நாட்கள் வீட்டை பூட்டிவிட்டு வெளியூர் சென்றிருந்தார். அந்தச் சமயமே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தடயவியல் மற்றும் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-03)

# நகைகளை களவாடிய நபரை மறுநாளே கைது செய்த பொலிஸ்!



யாழ்ப்பாணம்,பெப். 21

மல்லாகத்தில் திருடப்பட்ட 10 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியான நகைகளை மறுநாளே தெல்லிப்பழை பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன், திருட்டு சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்துமேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மல்லாகத்தில் வீடொன்றில் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டன என்றுதெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் பொலிஸ் பரிசோதகர் கலாவினோதன் தலைமையிலான தெல்லிப்பழை குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று சந்தேக நபரையும் திருடப்பட்ட நகைகளையும் மீட்டனர்.

சந்தேக நபரையும் மீட்கப்பட்ட நகைகளையும் இன்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-03)

## தேர்தலை...

நகர்த்தல் பத்திரம் ஊடாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. தவிர்க்க முடியாத பல தடைகள் காரணமாக மார்ச் 09ஆம் திகதி தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பத்திரத்தில் தேர்தல் ஆணைக குழு கூறியுள்ளது.

இந்தத் தேர்தலுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவது கடினம் என திறைசேரியின் செயலாளர் ஏற்கனவே ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 41 கோடியே 6 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் வரை வாக்குச் சீட்டுகளை அச்சிட்டு வழங்க முடியாது என அரச அச்சகம் அறிவித்துள்ளது. தேர்தல் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான பாதுகாப்பை அளிப்பதற்கும் பொலிஸ் மா அதிபர் தவறியுள்ளார். இதற்காக செலுத்த வேண்டிய கட்டணம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தவிர, தேர்தலுக்கு தேவையான வாகன எரிபொருள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குமாறு பொறுப்பான அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், அரச அச்சகம், பொலிஸ் மா அதிபர், இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோர் தேர்தலுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்கவில்லை -என்றும் ஆதாரங்கள் - ஆவணங்களுடன் தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. (ஐ)

## ஐக்கிய...

கூடிய ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் கொட்டும் மழையிலும் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களுடன் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டத்தை கட்டுப்படுத்த பெருமளவிலான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பகுதியில் சுமார் இரு மணிநேரம் தொடர்ந்த போராட்டத்தால் அந்தப் பகுதி ஊடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவித்தனர். ஆனால், அவர்கள் செல்ல மறுத்துவிட்டனர். இந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று மாலை ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது.

முன்னதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு மற்றும் காலி முகத்திடல் ஆகிய பகுதிகளுக்குள் பிரவேசிக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடை விதித்திருந்தது. மேலும், பாதசாரிகள் அல்லது வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. எனினும், நேற்றைய தினம் கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல வீதிகளில் நுழைய தடை விதிக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலுக்கு எதிரான மனு; விசாரணை 23 ஆம் திகதி

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவிடக் கோரி ஓய்வு பெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தர வினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, எதிர்வரும் 23ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று திங்கட்கிழமை நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன முன்னிலை யில் இன்று அழைக்கப்பட்டபோது, இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

முன்னதாக எதிர்வரும் 23 ஆம் திகதி குறித்த மனுவை பரிசீலிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், தபால் மூலம் வாக்களிப்பு காலவரையறை யின்றி ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, 23 ஆம் திகதிக்கு முன்னதாக மனுவை பரிசீனைக்கு எடுத்துக் கொள்ளு மாறு கோரி, மனுதாரர் தரப்பில் உயர் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்தார்.

அதன்படி, மனு நேற்று அழைக்கப்பட்டபோது, இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பான தேசிய தேர்தல் ஆணைக்குழு சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், எதிர்வரும் 23ஆம் திகதி திட்டமிட்டபடி தபால் மூல வாக்களிப்பு இடம்பெறாத தால், குறித்த வழக்கை முன்னர் திட்டமிட்டபடி அன் றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இந்தநிலையில், மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படாததால், இந்த வழக்கை எதிர் வரும் 23 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்படுவதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்தது. (அ)

# “உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்தவேண்டும்”

## பாராளுமன்றுக்குள் இன்று போராட்டம்

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கோரியும் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்துக்குள் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திர மக்கள் கூட்டணி உள்ளிட்ட எதிரணிகள் இணைந்தே இன்று செவ்வாய்க்கிழமை இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

மேற்படி இரு விடயங்களையும் முன்வைத்து அர சுக்கு எதிராக நாட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். இந்த போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இன்று பாராளுமன்றத் துக்குள்ளும் போராட்டம் நடத்தப்பட உள்ளது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. (அ)

# வாகன உதிரிப் பாகங்கள் சுங்கப் பிரிவினால் அழிப்பு



கொழும்பு, பெப். 21

கடந்த சில வருடங்களில் கைப்பற்றப்பட்ட வாகனங் களின் உதிரிப் பாகங்கள் மற்றும் ஏனைய பாகங்களை இலங்கை சுங்கத்துறை நேற்று திங்கட்கிழமை அழித்தது.

திணைக்களத்தின் வருமான மீளாய்வு பிரிவினால் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு அரச சொத்துகளாக அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில், கைப்பற்றப்பட்ட சுமார் 100 வாகன உதிரிப் பாகங்கள் நேற்று திங்கட்கிழமை சுங்க மேலதிக நாயகத்தின் மேற்பார்வையில் அழிக்கப்பட்டன. (ஐ)

# மக்களுக்கு உணவு இல்லை 13 பற்றி பேசி என்ன பயன்?

## கேள்வி எழுப்புகிறார் திஸ்ஸ அத்தநாயக்க



கொழும்பு, பெப். 21

**“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது சட்டவிரோதமான சட்டம் அல்ல. இதைப் பௌத்த பிக்குகள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.”**

**-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியதாவது:-

ஜே.ஆர்.ஜயவர்தனவும் ராஜீவ் காந்தியும் இணைந்து உருவாக்கி யதுதான் இந்த 13 ஆவது திருத்தச் சட்டமும், அதன் அடிப்படையி லான மாகாண சபை முறைமையும்.

இதில் பிரச்னை என்னவென் றால் காணி - பொலிஸ் அதிகாரம் தான். இது சம்பந்தமாகப் பெரும் பான்மையான மக்கள் சந்தேகத்து டன் பார்ப்பதுதான் இந்தப் பிரச்னைக்குக் காரணம்.

காணி - பொலிஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால் இப்படி இப் படியான ஆபத்துக்கள் ஏற்படும் என்று தெற்கு மக்களுடன் சேர்ந்து பௌத்த பிக்குகளும் நினைக்கின்ற னர்.

எனவே, நாடு பொருளாதார பிரச்னையை எதிர்கொண்டிருக்கும் நிலையில் இந்த 13 ஆவது திருத்தம் பற்றிப் பேசவேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

மக்கள் மூன்று வேளையும் உண்ண முடியாத நிலையில் உள்ள னர். இதனால் 13 பற்றிப் பின்னர் பேசலாம் என்பதே எமது நிலைப் பாடு.

அதற்கு முன் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்னு ரிமை கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# தேர்தல் ஆணைக்குழு தலைவர் உட்பட உறுப்பினர்கள் நீக்கப்படும் சாத்தியம்!

கொழும்பு, பெப். 21

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர் உட்பட சகல உறுப்பினர்களும் நீக்கப்பட்டு புதிய உறுப்பினர்களுடன் தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அரசியலமைப்பு பேரவை அனைத்து ஆணைக் குழுக்களுக்கும் விண்ணப்பங்களை கோரியுள்ளதுடன் ஒரே நேரத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தலை வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நீக் கப்படுவார்கள் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலும் புதிய தலைவர் மற்றும் புதிய உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவின் கீழ் நடத்தப் படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதோடு இந்த நீக்கமும் இடம்பெறும் எனவும் கூறப்படுகின்றது. (அ)

# வடக்கு - கிழக்கு தேர்தல்களில் பா.ஜ.கவும் போட்டியிடலாம்!

## ஆச்சரியப்பட எதுவுமில்லை என்கிறார் விமல்



கொழும்பு, பெப். 21

வடக்கு, கிழக்கு மாகாணங் களில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின் போது மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி போட்டி யிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத் தேவையில்லை என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப் பினருமான விமல் வீரவன்ஸ தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

வடக்கையும், கிழக்கையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யின் கைகளிலே இலங்கை அரசாங் கம் எப்போது தாரை வார்த்தது?

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலைவராக மோடி எப்போது பிரகடனப்படுத்தப்பட்டார்? அண்ணாமலையின் கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ள இந்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதில ளிக்க வேண்டும்.

அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்த கருத் துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் நடத்த, அண்ணாமலை மோடியையும் வடக்கு - கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார்.

இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது, எல்லாம் மர்மமாகவே உள்ளது - என்றார். (அ)

# புலம்பெயர்ந்து வாழ்பவரால் காணியற்றோருக்கு காணிகள்!

யாழ்ப்பாணம், பெப். 21

புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்பவர் யாழ்ப்பாணத்தில் அவ ருக்கு சொந்தமான காணியை காணியற்றோருக்கு பகிர்ந்தளித் துள்ளார்.

வேலணை - கரம்பொன் மேற்கை சொந்த இடமாகக் கொண்ட திருமதி வரதா சண்முகநாதன் என்பவரே தனக்கு சொந்தமான காணியை 9 குடும் பங்களுக்க தலா இரண்டு பரப்பு வீதம் பகிர்ந்து அளித்துள்ளார்.

பகிர்ந்தளிக்கப்பட்டோருக்கான காணி உறுதி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மேலைக்கரம் பொன் முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் அப்பகுதியின் கிராம சேவையாளர் புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், திருமதி வரதா சண்முகநாதனை பின்பற்றி புலம் பெயர் நாடுகளில் வாழ்பவர்கள் காணியற்றோருக்கு உதவவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.